வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.08.2023 திங்கட்கிழமை | இதழ் : 254 | பக்கங்கள் : 16




## வடமராட்சியில் விபத்து; இளைஞர்கள் இருவர் பலி!

வடமராட்சி, ஓக. 21

வடமராட்சியில் நேற்று அதிகாலை மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

நெல்லியடி - கொடிகாமம் வீதியில் கோயில் சந்தை பகுதியில் இந்த விபத்தில் மன்னாரை சேர்ந்த - யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் வசித்து வந்த செல்வநாயகம் வின்சன் மனோஜ்குமார் (வயது 31), கரவெட்டி, வதிரியை சேர்ந்த விஜயகாந்த் நிசாந்தன் (வயது 29) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

மரண சடங்கு ஒன்றுக்காக சென்ற இவர்கள் கொடிகாமம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். வீதி வளைவு ஒன்றில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்

11

## நாகபட்டினம் – தலைமன்னார் படகு சேவைக்கு அனுமதி!

சென்னை, ஓக. 21

வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடிகாட்டியுள்ளதால் இந்தியா - இலங்கை இடையே விரைவில் படகு சேவை தொடங்க நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது என்று தமிழ் நாடு அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் கெவடியாவில் 19ஆவது கடலோர மாநிலங்கள் மேம்பாட்டு குழும கூட்டம் நேற்று நடந்தது. மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால் தலைமையில் நடந்த கூட்டத்தில் கடலோர மாநிலங்களின் துறைமுக அமைச்சர்கள், மத்திய, மாநில அரசுகளின் அலுவலர்கள், கடல்சார் சபை அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் சார்பில் இந்தக்

11

# அடித்தால் திருப்பி அடியுங்கள்!



## புதுக்குடியிருப்பில் வைத்து தெரிவித்தார் மனோ எம்.பி.

கொழும்பு, ஓக. 21

“வன்முறைக்கு எதிராக - தற்காப்புக்காக திருப்பி அடிக்க முடியும். அரசாங்கமும் சட்டமும் எங்களுக்கு பாதுகாப்பு தராவிட்டால் எமது குடும்பத்தையும் சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும்”, என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

11



## லயன் மக்களின் கொட்டில் வீட்டை உடைத்து அராஜகம்!

மாத்தளை, ஓக. 21

லயன் குடியிருப்பில் இருந்த மக்களின் தற்காலிக வீடுகளை அந்தத் தோட்டத்தின் உதவி முகாமையாளர் அடித்து நொருக்கும் காணொலி சமூக ஊடகங்களில் பரவி வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மாத்தளை, எல்கடுவ பிளான்டேசனுக்கு உட்பட்ட ரத்வத்தை லயன் குடியிருப்பில் இருந்த மூன்று குடும்பங் களை சேர்ந்த 14 பேர் ஒரே லயன் அறையில் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர். தமக்கு

11

## சஜித் கூட்டணியில் இணைகிறார் டலஸ்?

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்காக சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையும் இணையவுள்ளன என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக சஜித் போட்டியிடுவார் என்றும் வெற்றிபெற்றால் டலஸ்

11

## மோதலில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 21

மதுபானசாலை ஒன்றில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று உயிரிழந்தார்.

வவுனியா மகாறம்பைக்குளம் காந்தி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள மதுபானசாலை ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த மோதலில் காயமடைந்த இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இருவரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மற்றவரை தேடி வருகின்றனர். (ஐ)

## எங்கள் எல்லை கிராமங்களை காப்பவர்கள் மலையக மக்களே!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.



முல்லைத்தீவு, ஓக. 21

மலையகத்திலிருந்து வாழ வேண்டும் என வந்த உறவுகள் எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் உணர்வோடு செயல்படுகின்றார்கள் - இடங்கள்தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மலையகம் 200 நூல்

11

## விசுவமடு விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

முல்லைத்தீவு, ஓக. 21

டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு முல்லைத்தீவு, விசுவமடுவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான தர்மலிங்கம் நகுலேஸ்வரன் (வயது 47) என்ற குடும்பஸ்தரே காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

பரந்தன் நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும் பரந்தன் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும்

11

## இருந்த இடத்திலேயே சிவனாலயம் வேண்டும்!

### ஆலய நிர்வாகம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 21

குருந்தூர்மலை ஆதி சிவன் ஆலயம் இருந்த இடத்திலேயே மீளவும் சிவன் ஆலயம் நிறுவுவதாக இருந்தால் மாத்திரமே மறவன்புலவு சச்சிதானந்தன் குழுவின் யோசனையை ஏற்போம். அதை தவிர்த்து, சட்டவிரோத விகாரைக்கு அங்கீகாரம் வழங்கும் மறைமுக நிகழ்ச்சி நிரலுடன் வேறு யோசனைகளை முன் வைத்து வந்தால் அவர்களின் யோசனையை கருத்திலும் எடுக்கமாட்டோம் என்று ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குருந்தூர்மலையில் சிவன் ஆலயம் அமைப்பதற்கு யாழ்ப்பாணம், குருந்தூர்மலை, தையிட்டியிலுள்ள சட்டவிரோத விகாரைகளின் விகாராதிபதிகள் உள்ளிட்டவர்களுடன் ஈழம் சிவ சேனை அமைப்பு

11

## குருந்தூரில் நடந்த பொங்கலே தமிழரின் இறுதி பூசையாகட்டும்

### விகாராதிபதி சாந்த போதி தேரர் சொல்கிறார்

முல்லைத்தீவு, ஓக. 21

குருந்தூர் மலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பொங்கல் வழிபாடே தமிழர்களின் இறுதி பூசையாக இருக்க வேண்டும் என்று குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த குருந்தூர் மலையை ஒருபோதும் தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்க போவதில்லை. சம்பிரதாய ரீதியான இந்து மக்கள் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கமாட்டார்கள்.

11

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க தெற்கில் அரசியல் பரபரப்படைந்து வருவதுடன் அணிகள் சேரும் முயற்சிகள் பல்வேறு தரப்பினராலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதான வேட்பாளராக களம் இறங்கவுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரின் கட்சி பலவீனமடைந்திருப்பது ஒரு பெரிய பலவீனம்தான்.

ஆனால், எதிரணியிலிருந்து பலமான வேட்பாளர் ஒருவர் போட்டியில் களம் இறங்காதவரை அவருக்கு சாதகமான நிலைமையே காணப்படுகின்றது.

அதனால்தான் அவர் தனக்கு எதிராக பலமான வேட்பாளர் ஒருவர் களம் இறங்கிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார். அவரைப் பொறுத்தவரை எதிரணி பலமடைந்து விடக்கூடாது என்பதில் காட்டும் கவனத்தை, தன்னையோ அல்லது தனது கட்சியையோ பலப்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபடவில்லை என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

பொதுஜனபெரமுனவில் இரண்டு அணிகள் இருப்பது அவருக்கு எப்போதும் நல்லது என்பது தெரிந்ததுதான். ஆனால், அவர் அந்த இரண்டை மூன்றாக மாற்றியிருக்கிறார். அதிலும் முக்கியமாக அந்த மூன்றாவது அணிக்கு - மற்றைய ஓர் அணியின் ஆதரவையும் பெறுவதில் அவர் வெற்றிபெற்றிருக்கிறார் என்கின்றன தெற்கு செய்திகள்.

பொதுஜன பெரமுனவில் நாமல் அணி, பஸில் அணி என்று இரண்டு அணிகள் இருப்பது இரகசியமானதல்ல. இதேவேளை சிறிய அணி ஒன்று கோட்டா அணியாகவும் இயங்கிவந்தது. அந்த அணியைப் பலப்படுத்தி மிகப் பெரிய அணியாக மாற்றுவதிலேயே கடந்த காலங்களில் முக்கிய கவனம் செலுத்திவந்த ஜனாதிபதி ரணில், இப்போது அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

இன்றைய நிலையில் அறுபத்தி ஐந்து எம்.பிக்கள் அந்த அணியில் திரண்டிருக்கின்றனர். தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் சேர்த்து.

ஆரம்பத்தில் ஜனாதிபதியின் இந்த 'மூவு'க்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்த நாமல், இப்போது அதற்கு ஆதரவான நிலையில் இருக்கிறார் என்று அந்த வட்டாரங்களுடன் நெருக்கமான ஒருவர் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அடுத்த ஐந்து ஆண்டுகள் - முடிந்தால் பத்து ஆண்டுகளுக்கு எதிரணியில் இருக்கவே விரும்புகின்றாராம். அதாவது எதிர்க்கட்சித் தலைவராக. எதிரணியில் இருந்தால் மாத்திரமே தன்னையும் கட்சியையும் வளப்படுத்தி விடலாம் என்று கணக்குப்போடும் அவர், அதற்கு இடைஞ்சலாக இருக்கும் பஸில் ராஜபக்ஷபலவீனப்படுவதெனில் ரணில் தரப்புக்கு ஆதரவாக பிரியும் அந்த அணி பலமானதாக இருப்பது நல்லது என்று நினைக்கிறாராம்.

ஆனால், பஸில் ஆதரவு தரப்பினரோ பஸிலை அடுத்த பிரதமராக்க வேண்டும் என்றும் அப்படியெனில்தான் பொதுஜன பெரமுன ரணிலுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் கட்சிக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், பஸிலுக்கு ஆதரவாக வெளிச் சக்தி ஒன்றும் அழுத்தம் கொடுப்பதாகத் தெரியவருகின்றது.

இதனால்தான் பொதுஜன பெரமுனவிலிருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளியேறுவது தனக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று நாமல் தரப்பில் விரும்பப்படுகின்றதாம்.

பொதுஜன பெரமுனவை - அவர்களுக்கு இடையே இருக்கும் இந்த 'கயிறிழுப்பை' பயன்படுத்தியே தனக்கு சாதகமாக மாற்றிவிட்ட ரணிலின் கவனம் இப்போது சஜித் பக்கம் திரும்பியிருக்கின்றது.

சஜித் தரப்பும் ரணில் தரப்பும் மீண்டும் இணைய வேண்டும் என்ற குரல் இப்போது சஜித் தரப்பிலிருந்து பலமாக ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது.

இதற்கான முயற்சியில் ஈடுபடும் சஜித் தரப்பினர், ஜனாதிபதி தேர்தலின் போதே அடுத்த பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் வேட்பாளராக சஜித்தை அறிவிக்க வேண்டும் என்றும் கோரிவருகின்றனர். ஆனால், தற்போதைய பிரதமரும் தனது றோயல் கல்லூரி காலத்து நண்பருமான தினேஷ் குணவர்த்தனவுடனான கூட்டு எந்தவித நெருக்கடியுமின்றி, சுமுகமாக செல்வதை வசதியாகக் கருதும் ரணில் சஜித்தை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ரசிக்கவில்லை என்கின்றன ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

அவரின் 'குறி' இப்போது சஜித்தை தனிமைப்படுத்திவிட்டு கட்சியிலுள்ள மற்றவர்களை எப்படி தன்னோடு சேர்த்துக்கொள்வது என்பதுதானாம்.

ஆனால், சஜித் தரப்பில் அவருக்கு நெருக்கமான சிலர் தமது ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை எப்படியிருக்கவேண்டும் என்பதை தயாரிப்பதில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டிருக்கின்றனராம். அவர்களில் நம்மவர் ஒருவரும் இணைந்திருப்பது கூடுதல் தகவல்.

**- ஊர்க்குருவி.**

# ஐரோப்பாவிலும் தமிழ் கலாசாரத்தை வளர்த்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்களே

## இந்தியாவின் யாழ். முன்னாள் துணை தூதர்

*யாழ்ப்பாணம், ஓக. 21*

யாழ்ப்பாணத்திலிருந்து நான் சென்று ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் யாழ்ப்பாண மக்களை மறக்கவில்லை. ஐரோப்பாவிலும்கூட நமது தாய்மொழி கலாசாரங்களை வளர்த்தது யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் என முன்னாள் இந்தியத் துணைத் தூதுவர் ஆ. நடராஜன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பரத நாட்டிய அரங்கேற்றம் ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு வந்த போது சில நண்பர்கள் யாழ்ப்பாணத்தை மறந்து விட்டீர்களா என்று கூறியபோது யாழ்ப்பாணம் எனது சொந்த வீடு எனப் பதிலளித்தேன். இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்தாலும் அடிக்கடி யாழ்ப்பாணம் நினைவுக்கு வருகின்றது. தமிழ் எங்கிருந்து வருகின்றது என எமது மக்களுக்குத் தெரிகின்றது.

அங்கு தமிழ் கதைக்கும் போது இலங்கைத் தமிழ் மொழியில் ஜாடை உள்ளதாக சிலர் குறிப்பிட்டனர். ஐரோப்பாவிலும் கூட நமது தாய் மொழி கலாசாரங்களை வளர்த்தது யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் - என்றார். (ஐ)

# 13 குறித்து ஜனாதிபதி பேசுவதை விடுத்து தீர்வுக்கு வரவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

*கொழும்பு, ஓக. 21*

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் , அதிகார பகிர்வு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதாகக்கூறி முன்னெடுக்கப்படும் விடயங்கள் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவித்து விடும். எனவே, ஜனாதிபதி இவ்வாறான வீணான குழப்பங்களை ஏற்படுத்தி காலத்தை இழுத்தடிப்பு செய்யாமல் உடனடியாக தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளை பகுதியில் இடம்பெற்ற மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டு மக்கள் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றி கதைக்கிறார்களா? இல்லை. பொருளாதார பிரச்னைகள், அதிகரிக்கப்பட்ட நீர் கட்டணம், செலுத்த முடியாமல் உள்ள மின் கட்டணம், சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள மந்த போசணை, கடைக்குச் சென்று பொருட்களை அதிக விலைக்கு கொடுத்து கொள்வனவு செய்ய முடியாமை உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பிலேயே அதிகம் கதைக்கிறார்கள்.

மக்களுக்கு வருமானம் பெற்றுக் கொள்ளும் வழிகள் கிடையாது. தமக்கு நிம்மதியாக வாழ்வதற்கான சூழல் ஒன்றை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள் எனவே கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வாறு பல பிரச்னைகள் காணப்படும் போது ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஏன் அடிக்கடி கதைக்கிறார்?. இந்த சந்தர்ப்பத்தில் 13 தொடர்பில் ஏன் கதைக்க வேண்டும்.

இவற்றை பார்க்கும் போது இரண்டு விடயங்கள் தெரிகிறது. ஒன்று 13 அமுல்படுத்தப் போவதாக கூறி நாட்டில் நிலவும் உண்மையான பிரச்னைகளை மறைப்பது.

இரண்டாவது அடுத்த வருடம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வது என்பனவாகும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி 13ஐ நடைமுறைப்படுத்த போவதுமில்லை. நான் அதனைச் செய்வேன் என இந்தியாவையும், தமிழ் அரசியல்வாதிகளையும், வடக்கு - கிழக்கு மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்.13 என்பது அரசமைப்பின் ஒரு பகுதியாகும்.

முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால் 13 ஆவது திருத்தத்தில் உள்ள 98 வீதமான விடயங்களை பூர்த்தி செய்ததை போன்றதாகும். மிகுதி பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் காணி என்பன தொடர்பில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்க முடியுமல்லவா - என்றார்.

# துப்பாக்கிசூடு நடத்தி சந்தேகநபர் கைது!

*கொழும்பு, ஓக. 21*

பல குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த சந்தேக நபர் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையான சந்தேக நபர், அதற்கான பணத்துக்காக பொலிஸ் அதிகாரி போல் நடித்து நெடுஞ்சாலையில் வாகனங்களை நிறுத்தி அதில் பயணிக்கும் நபர்களின் உடைமைகளை கொள்ளையடித்து வந்துள்ளார்.

சந்தேக நபர் பேராதனை போதனா மருத்துமவனையில் சேர்க்கப்பட்ட பின்னர் கண்டி தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்குபடுத்துமாறு கோரிக்கை

*கொழும்பு, ஓக. 21*

நாட்டில் இயங்கிவரும் முறைசாரா முச்சக்கரவண்டி சாரதிகள் பயணிகளிடம் அநியாயமாக பணம் அறவிடுகின்றனர் என்று அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டி சேவையை முறையான ஒழுங்குமுறைக்கு உட்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகளை தவிர்க்க உரிய அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என்றும் இதன் போது கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# முதலுதவி பயிற்சிப் பாசறை

*யாழ்ப்பாணம், ஓக. 21*

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையினரை வளவாளர்களாகக் கொண்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர்களுக்கான முதலுதவி பயிற்சி பாசறை நடைபெறவுள்ளது.

எதிர்வரும், சனி, ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 2. 00 மணிவரை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை பணிமனையில் இடம்பெறும்.

நிகழ்வில் கலந்துகொள்ள பதிவை மேற்கொள்வது அவசியமாகும். https://www.sirakukal.live/firstaidcamp நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கான சர்வதேச ரீதியிலான சான்றிதழ் கட்டணமாக பாடசாலை மாணவர்களுக்கு 300 ரூபாயும் ஏனையவர்களுக்கு 1250 ரூபாயும் அறவிடப்படும். மேலதிக விவரங்களை பெற 075 632 2173 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

மேலும், பாடசாலை மாணவர் களை இந்த நிகழ்வில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்துமாறும் கேட்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
21.08.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 4

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீண்டுமொரு போர்

மீண்டுமொரு போரை நாங்கள் விரும்பவில்லையென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் நிதானத்துடன்தான் இவ்வாறெல்லாம் பேசுகின்றாரா - என்னும் கேள்விக்கு அப்பால் ஜனநாயக தலைமை என்னும் வகையில் ஆற்ற வேண்டிய பணிகளை சம்பந்தன் முன்னெடுத்தாரா அல்லது ஆகக் குறைந்தது தென்னிலங்கைக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய வகையிலான ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றாரா என்னும் கேள்வி உண்டு. ஜனநாயக ரீதியில் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றுவதற்கான ஆளுமையற்றிருக்கின்றபோது நாங்கள் மீண்டுமொரு போரை விரும்பவில்லையென்று கூறுவது ஒரு பொறுப்பற்ற வாதமாகும். யார் முன்னெடுக்கப் போகும் போர் அது? ஏற்கனவே, யுத்தத்தால் உருக்குலைந்து நிமிர முடியாமல் கிடக்கும் மக்கள் கூட்டமொன்று எவ்வாறு இன்னொரு போர் பற்றி சிந்திக்க முடியும்?

சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைமை தாங்கிய போதுகூட, ஒரு ஜனநாயக தலைமை ஆற்ற வேண்டிய பணிகள் எவற்றையுமே முன்னெடுக்கவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் தாங்களாக எதனையும் முன்னெடுக்கப் போவதில்லை. சந்திரிகா காலத்தில், அவர் சில விடயங்களை முன்னெடுக்க முற்பட்டார் என்பது உண்மையாயினும்கூட, விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை எதிர்கொள்ள வேண்டிய ஒரு சூழலில்தான் சந்திரிகாவும் அவ்வாறானதொரு முடிவுக்கு வந்திருந்தார். இதனைத் தவிர, இரண்டு பிரதான சமரச பேச்சு சூழல்களிலும் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே கொழும்பின் சிங்கள ஆளும் வர்க்கம் கீழிறங்கியது. முதலாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தம். இரண்டாவது, நோர்வே தலைமையில் நடைபெற்ற பேச்சு. இரண்டுக்கும் இடையில் சில வேறுபாடுகள் இருந்தபோதிலும்கூட, இரண்டு சந்தர்ப்பங்களிலும் சிங்கள ஆட்சியாளர்கள் வேறு வழியின்றியே கீழிறங்கினர்.

எனவே, சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் நிர்ப்பந்தங்களில்லாமல் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இறங்கி வரப்போவதில்லை. இந்த பின்புலத்தில் சிந்தித்தால் அரசியல் தீர்வு விடயத்தில் விரைந்து செயல்பட வேண்டும். மீண்டுமொரு போரை நாங்கள் விரும்பவில்லை - இவ்வாறான அறிக்கைகளை சிங்கள ஆட்சியாளர் - குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்க ஒரு நகைச்சுவையாகவே கடந்து சென்றுவிடுவார்.

எனவே, இப்போது தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் சிந்திக்க வேண்டிய விடயம் - எவ்வாறு தென்னிலங்கையின் மீது ஜனநாயக நெருக்கடிகளை ஏற்படுத்த முடியும். அதற்காக எவ்வாறு அனைவரும் ஓரணியாக செயலாற்ற முடியும்? ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து காய்கள் நகர்த்தப்படும்போது, அதனை எவ்வாறு தமிழ் மக்களின் நலனிலிருந்து பயன்படுத்த முடியும்? இந்தக் கேள்விகளின் அடிப்படையில்தான் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டும். செயலாற்ற வேண்டும். அவ்வாறில்லாது அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பதால் எவ்வித நன்மையுமில்லை.

மக்கள் தமிழ் அரசியல் தலைமைகள்மீது முற்றிலுமாக நம்பிக்கையிழந்து விட்டனர். ஏனெனில், இந்த அரசியல்வாதிகளின் சத்தங்களுக்கு மத்தியில்தான் பௌத்த மயமாக்கல் முன்னெடுக்கப்படுகின்றது. அரசியல்வாதிகளால் எதனையும் செய்ய முடியவில்லை. வடக்கு - கிழக்கில் பல்வேறு பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்கு உட்பட்ட இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவ்வாறாயின் அரசியல்வாதிகளின் பெறுமதி என்ன என்னும் கேள்வி எழுவது இயல்பானதே.

## நல்லூர் வளைவில் சேவல் கொடி நாட்டல்!



*யாழ்ப்பாணம், ஓக. 21*

*வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இந்த நிலையில் நல்லூர் வரவேற்பு வளைவில் சேவல் கொடி கட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.*

*யாழ்ப்பாணம் ஏ - 9 வீதியில் இருந்து செம்மணி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் குறித்த வரவேற்பு வளைவு உள்ளது. இதில், கொடியேற்றத்தை முன் னிட்டு நேற்றைய தினம் மதியம் 12 மணியளவில் சேவல் கொடி கட்டும் சம்பிரதாய நிகழ்வு இடம் பெற்றது. (ஐ)*

## சிங்கப்பூர் செல்கிறார் ஜனாதிபதி ரணில்!

*கொழும்பு, ஓக. 21*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று திங்கட்கிழமை சிங்கப்பூர் செல்லவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இந்தப் பயணத்தின் போது சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலிமா யாக்கோப், பிரதமர் லீ சியென் லூங் மற்றும் ஏனைய உயர்மட்ட பிரமுகர்களை சந்திக்கவுள்ளார்.*

*பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் கார்பன் நடுநிலை ஒப்பந்தமும் அவரது பயணத்தின் போது கையெழுத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், ஜனாதிபதி யின் கீழ் உள்ள அமைச்சுகளை மேற்பார்வையிட நான்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இதன்படி, பிரமித பண்டார தென்னகோன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவும், ஷெஹான் சேமசிங்க நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளுக்கான பதில் அமைச்சராகவும், கனக ஹேரத், தொழில்நுட்ப அமைச்சராகவும், அனுப பெஸ்குவால், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)*

## பெருந்திருவிழா

*யாழ்ப்பாணம், ஓக. 21*

*கோண்டாவில் கந்தர் வளவு மகா கணபதி பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் பூசைகள் சிறப்பாக நடைபெறவுள்ளன.*

*இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பைரதத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ரி)*

## நாடு திரும்பினார் பிரதமர் தினேஷ்!

*கொழும்பு, ஓக. 21*

*சீனாவுக்கு 4 நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் நாடு திரும்பினர்.*

*சீனா ஈஸ்டர்ன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தில் இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளனர்.*

*சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுனான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27 ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி கலந்து கொள்வதற்காக பிரதமர் சீனாவுக்கு சென்றிருந்தார்.*

*இதில், 60 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஐ)*

## வறட்சி காலநிலையால் தேயிலை துறை வீழ்ச்சி!


*கொழும்பு, ஓக. 21*

*நிலவும் வறட்சியான வானிலை காரணமாக தேயிலைத் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், தமக்கான வருமானம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தேயிலை செய்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.*

*வறட்சியால் தேயிலை அறுவடை 18 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தம்மிக மஹீபால தெரிவித்தார்.*

*எவ்வாறாயினும், வறட்சியான வானிலையுடன் தேயிலை உற்பத்தியை பாதுகாப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகும். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் கமிஷன் புரோக்கரேஜ் வகைகளால் லாபம் உண்டு. சக ஊழியர்களால் நிம்மதி உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து லாபம் சம்பாதிப்பீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரி உடன் மோதல்கள் வேண்டாமே.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மீனம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# நீட் தேர்வை இரத்து செய்யக்கோரி தி. மு. கவினர் நேற்று போராட்டம்!

சென்னை, ஓக. 21

நீட் தேர்வை இரத்து செய்யக்கோரி தி. மு. க. சார்பில் மாநிலம் முழுவதும் உண்ணாவிரத போராட்டம் நேற்று தொடங்கியது. அ. தி. மு. க. மாநாடு நடைபெறும் மதுரை தவிர மற்ற அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் உண்ணாவிரதம் தொடங்கியது.



தி. மு. க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிரான இந்த உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது. சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நடைபெற்றுவரும் இந்தப் போராட்டத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி, இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் தொடக்கத்தின் ஒரு பகுதியாக நீட் தேர்வால் உயிரிழந்த மாணவர்களின் படங்களுக்கு அமைச்சர்கள் துரைமுருகன், உதயநிதி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நீட் தேர்வுக்கு எதிரான உண்ணாவிரத போராட்டத்தில் மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாவட்ட தலைநகரங்களில் நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தை அமைச்சர்கள் தொடக்கி வைத்தனர். இந்தப் போராட்டம் மாலை 5 மணி வரை நடைபெற்றது. பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்று வரும் போராட்டத்தில் தி. மு. க. தொண்டர்கள் பலர் பங்கேற்றுள்ளனர்.

(ஐ)

# நீட் தேர்வுக்கு விலக்கு வரும்வரை திராவிட முன்னேற்ற கழகம் ஓயாது!

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, ஓக. 29

நீட் தேர்விலிருந்து விலக்கு பெறும் வரை தி. மு. க. ஓயாது என முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய முதல்வர் மு. க. ஸ்டாலின், நீட் தேர்வுக்கு எதிராக தி. மு. க. தொடர்ந்து குரல் கொடுத்துவருகிறது.

மசோதாவை குடியரசுத் தலைவரிடம் கொண்டு சேர்க்கும் வெறும் தபால்காரன்தான் ஆளுநர் ஆர்.என். ரவி. குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த நீட் விலக்கு தீர்மானம் நிலுவையில் இருக்கும்போதே அதற்கு ஒப்புதல் தர மாட்டேன் என ஆளுநர் கூறினார்.



ஆளுநரின் இத்தகைய போக்கை கண்டித்துதான் தமிழ்நாடு முழுவதும் இன்று திமுக போராட்டம் நடத்துகிறது. நீட் தேர்விலிருந்து விலக்கு பெறும் வரை தி. மு. க. ஓயாது.

தி. மு. கவை யாராலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என தி. மு. க. தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

அ. தி. மு. க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நீட் எதிர்ப்பு தீர்மானத்தையும் அப்போதைய எதிர்க்கட்சியான தி. மு. க. ஆதரித்தது.

நீட் எதிர்ப்பு மசோதா மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டதை சட்டப்பேரவைக்கே சொல்லாமல் அ. தி. மு. க. அரசு மறைத்தது. தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் நீட் விலக்கு மசோதாவை சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது- என்றார்.

(ஐ)

# அ. தி. மு. க. மாநாட்டில் பல்லாயிரம் பேர் திரள்வு

மதுரை, ஓக. 21

51 அடி உயர கம்பத்தில் அ. தி. மு. க. கொடியை ஏற்றி மதுரை மாநாட்டை நேற்று தொடக்கி வைத்தார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

மதுரை அ. தி. மு. க. மாநாட்டில் பங்கேற்பதற்காக தமிழகம் முழுவதுமிருந்து கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டனர்.

பொதுச்செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்ற பின்பு நடைபெறும் முதல் மாநாடு என்பதால் பிரமாண்டமான ஏற்பாடுகளை கட்சியினர் செய்துள்ளனர்.

அ. தி மு. கவில் இருந்து முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் நீக்கப்பட்ட பின்பு, தென் மாவட்டங்களில் அதிமுகவை பலப்படுத்துவதற்காகவும், தனக்குள்ள செல்வாக்கை நிலைநாட்டவும் பழனிசாமி மதுரையில் இந்த மாநாட்டை நடத்துகிறார் என்று கூறப்படுகிறது.

கட்சி தொடங்கி 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதை நினைவுகூரும் வகையில் இந்த மாநாட்டுக்கு 'வீர வரலாற்றின் பொன் விழா எழுச்சி மாநாடு' என பெயரிடப்பட்டுள்ளது.

கூட்டணி கட்சித் தலைவர்கள் யாரும் அழைக்கப்படாத நிலையில், முழுக்க முழுக்க அ. தி. மு. கவினர் மட்டுமே பங்கேற்கும் வகையில் மாநாடு ஆரம்பமானது.

மாநாட்டில் பங்கேற்க பேருந்துகள், தனியார் வாகனங்கள் மூலம் நிர்வாகிகள், தொண்டர்கள் மதுரையில் நேற்றுமுன்திம் முதலே குவியத் தொடங்கினர்.

மாநாட்டுத் திடலில் பந்தல், உணவுக் கூடங்கள், வாகன நிறுத்தும் இடங்கள் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. காலை முதல் இரவு வரை தொண்டர்களுக்கு உணவு வழங்க 300 இடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 7.45 மணியளவில் மாநாட்டுத் திடலின் முகப்பில் உள்ள 51 அடி உயர கம்பத்தில் பழனிசாமி கட்சிக் கொடியை ஏற்றி மாநாட்டை தொடக்கி வைத்தார்.

ஜெயலலிதா பேரவை உள்ளிட்ட பல்வேறு அணிகளை சேர்ந்த 3,000 தொண்டர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

மாநாட்டின் பிரதான நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு தொடங்கின.

(ஐ)

# நல்லூர் கந்தனுக்கு இன்று கொடி; கொடிச்சீலை எடுத்து வரப்பட்டது!





படங்கள்: ஐ. சிவசாந்தன்

**யாழ்ப்பாணம், ஓக. 21**

**வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்றுதிங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதற்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.**

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

இதன்படி கல்வியங்காட்டில் அமைந்துள்ள கொடிச்சீலை வழங்கும் செங்குந்தர் பரம்பரையை சேர்ந்தவரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூசைகள் நடைபெற்று மங்கள வாத்தியம் சகிதம் கல்வியங்காடு வேல் மடம் முருகன் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டது.

தொடர்ந்து வேல் மடம் முருகன் ஆலயத்தில் விசேட பூசகள் நடைபெற்று அங்கிருந்து கொடிச்சீலை சிறிய இரதத்தில் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்து செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

இன்று திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மன்னாரில் காணி விடுவிப்பு கூட்டம் தமிழ் எம். பிக்கள் புறக்கணித்தனர்!

மன்னார், ஓக. 21

மன்னார் மாவட்டத்தில் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மற்றும் அவற்றை விடுவிப்பது தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

காணி விடுவிப்பு தொடர்பில் உயர் மட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை ஏனையவர்களுக்கு தெரிவிக்கும் வகையிலேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் காணி உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், நகர சபை, பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இவ்வாறான கூட்டங்களுக்கு உரிய நேரத்தில் தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனவும் கூட்டங்களில் தங்களது கருத்துகளை தெரிவிப்பதற்கு அரச தரப்பு பிரதிநிதிகள் வாய்ப்பு வழங்குவதில்லை என்பதாலுமே அவர்கள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# நல்லூர் திருவிழாவையொட்டி ஆலய சுற்றுவீதிகள் மூடப்பட்டன!

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்று வீதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டன. திருவிழா நிறைவடையும் வரை - எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி வரை இந்த வீதிகள் மூடப்பட்டிருக்கும் என்று யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சுற்று வீதிகள் மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்பாக உள்ள குறுக்குத்தெரு வீதியால் பயணித்து, யாழ்ப்பாண நகரை அடைய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலய இரதோற்சவம் மற்றும் சப்பைரதத் திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதி ஊடாகவே பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆலய சுற்று வீதிகளில் வசிப்பவர்கள் தமது வாகனங்களை வீதிகளுக்குள் கொண்டுசெல்வதற்கு யாழ்ப்பாண மாநகர சபையால் நிபந்தனையுடனான விசேட அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர வேறு வாகனங்கள் எக்காரணம் கொண்டும் உட்நுழையக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டன!

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியின் கிணற்றிலிருந்து ஒருதொகை வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டன.

பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் கிணறு சுத்தம் செய்யும் வேளையில் ஆயுதங்கள் காணப்பட்டன. இது தொடர்பில் இராணுவம், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்று அந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. பழைய பி.கே.எல். எம்.ஜி, ஏ. கே ரக தோட்டாக்கள் 60, எறிகணைகள் 5, ஆயுதம் சார் இலத்திரனியல் பொருட்களும் இதன்போது மீட்கப்பட்டன.

இந்த ஆயுதங்கள் போர் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# குருநாகலில் காட்டுக்கு தீ வைத்த காதலர்கள் கைது!

கொழும்பு, ஓக. 21

குருநாகல் அத்துகல மலையைப் பார்க்கச் சென்ற காதலர்கள் அந்தக் காட்டை தீயிட்டு கொழுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பற்ற வைத்த தீக்குச்சியால் இந்த அனர்த்தம் நேர்ந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் மூன்று ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட காதலர்கள் இருவரையும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்க குருநாகல் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அதுகல மலை உச்சியில் உள்ள புத்தர் சிலையை பார்வையிடுவதற்காக காதலர்கள் இருவர் நேற்று காலை வந்துள்ளனர். இதன்போது குறித்த யுவதி தீக்குச்சியைப் பற்ற வைத்து காட்டின் இரு பகுதியிலும் வீசியுள்ளார்.

இதனைப் பார்த்த மக்கள் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 24 மற்றும் 20 வயதுடைய மாத்தளை மற்றும் மஹவ பிரதேசத்தில் வசிக்கின்றனர். கைதான இளைஞர் படைச் சிப்பாய் என்று அறிய வருகின்றது.

(ஐ)

# 60 ஆயிரத்தை கடந்தது டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, ஓக. 21

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

அதன்படி, இதுவரை 60 ஆயிரத்து 36 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இங்கு, 12 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் சுமார் 30 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 446 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனிடையே, கடந்த



ஜனவரி மாதம் முதல் டெங்கு நோயால் 38 மரணங்கள் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கசிப்பு, மாவா போதையுடன் இளைஞர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 21

கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதியில் வைத்து இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# பெண்கள் படுகொலை நாட்டில் அதிகரிப்பு!

**கொழும்பு, ஓக. 21**

**நாட்டில் பெண்களுக்கு எதிரான கொலைக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 3 வருடங்களில் 263 பெண்கள் கொல்லப்பட்டனர். 2022 ஆம் ஆண்டிற்கான பொலிஸ் தரவு அறிக்கை தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டு (2022) 102 பெண்கள் கொல்லப்பட்டனர். 2021 இல் 79 பெண்களும் 2020 இல் 82 பெண்களும் கொல்லப்பட்டனர் என்றும் அந்த விவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பெண் கொலைகள், பாலியல் வன்புணர்வு, கொலை முயற்சி, கடுமையான காயம், பாலியல் துன்புறுத்தல், விபசாரத்துக்கு உட்படுத்துதல், கடத்தல் என்பவை சார்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் கடந்த ஆண்டில் 600 பதிவு செய்யப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில், பெண்களுக்கு இவ்வாறான குற்றங்கள் தொடர்பில் 568 முறைப்பாடுகளும், 2020இல் 595 முறைப்பாடுகளும் பதிவாகின. கடந்த மூன்று ஆண்டுகளில் (2020, 2021, 2022), 606 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இருப்பினும், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பாலியல் வன்புணர்வு குற்றங்கள் குறைந்துள்ளன. ஆனால், பெண்கள் கொல்லப்படுதல் அதிகரித்து வருகிறது.

கொல்லப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர் பகலில் - அனேகமாக அவர்களின் வீட்டில் வைத்தே கொல்லப்பட்டனர். அது மட்டுமின்றி, பெண்கள் பெரும்பாலும் தங்கள் கணவன், காதலன் அல்லது மணஉறவுக்கு அப்பால்பட்ட காதலனால் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# முல்லையில் மதுபானசாலையை அகற்றுமாறு மக்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு உண்ணாப்பிலவில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு பொது மக்கள், பொது அமைப்புகள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உண்ணாப்பிலவு பகுதியில் புதிதாக சில்லறை மதுபானசாலை நிலையம் ஒன்று இந்த மாதம் 15ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த கிராம மக்கள் , பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து பிரதேச செயலாளருக்கு அதனை அகற்றி தருமாறு கோரி கடிதம் ஒன்றை இந்த மாதம் 16ஆம் திகதி வழங்கியுள்ளார்கள்.

கடிதம் வழங்கப்பட்டு இதுவரையில் குறித்த மதுபானசாலையை அகற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குறித்த கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதுபானசாலை அமையப்பெறும் இடத்திற்கு 100 மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில் பாடசாலைகளோ, தேவாலயங்கள், ஆலயங்கள் இருக்க கூடாது என்பது விதிமுறையாக இருக்கின்ற போதும் குறித்த இடத்திலிருக்கும் மக்களிடம் அபிப்பிராயம் கேட்கப்படவில்லை எனவும், இதனால் குறித்த கிராமத்தில் பாடசாலை அருகிலிருப்பதனால் பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் நிலையும், பாடசாலை இடைவிலகும் நிலையும் உருவாகும்என குறித்த கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)





# இராசையா நினைவு ஓவியங்கள் கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஓக. 21

புகழ்பெற்ற ஓவியர் ஆ. செ. இராசையாவின் 77ஆவது பிறந்ததினம் மற்றும் 3ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஓவிய கண்காட்சி தந்தை செல்வா கலையரங்கில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற நினைவு தினம் மற்றும் திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வை தொடர்ந்து அவர் வரைந்த ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# ‘மலையகம் 200’ வரலாற்று நூல் புதுக்குடியிருப்பில் வெளியீடு!

முல்லைத்தீவு, ஓக. 21

புதுக்குடியிருப்பில் மலையகம் 200 என்ற மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீடு நேற்று ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

பிரித்தானியர் காலத்தில் தேயிலை தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து மக்கள் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டனர். இவ்வாறு வந்தவர்கள் மலையக மக்கள் என்ற அடையாளத்தை பெற்றுள்ளனர். அவர்கள் இலங்கை வந்து 200 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவுகூரும் நிகழ்வுகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான நிகழ்வு நேற்று புதுக்குடியிருப்பில் முன்னெடுக்கப்பட்டது. சமூக செயற்பாட்டாளர் பழனியாண்டி நாகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், பிரபல தொழிலதிபர் கந்தையா பாஸ்கரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் நடராஜா , புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் நவநீதன் உள்ளிட்டவர்களும் பொது மக்களும் பங்கேற்றனர்.

(ஐ)

# ஆட்சியாளரின் நிகழ்ச்சி நிரல் இலகுவாக வர பிரதிநிதிகளின் ஒற்றுமையின்மை காரணம்!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி.

முல்லைத்தீவு, ஓக. 21

மக்கள் பிரதிநிதிகளுக்குள் ஒற்றுமையின்மையாலே நாட்டின் ஆட்சியாளர்கள் தங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டுவருவதற்கு இலகுவாக இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீடு நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மலையகம் 200 வரலாற்று நூல், 200 வருடங்களுக்கு முன்னர் மலையக மக்களுடைய வாழ்க்கை வரலாற்றை அவர்கள்பட்ட துன்பங்களை எமது சமுதாயம் திரும்பி பார்க்க வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. வரலாறுகளை நாங்கள் நிச்சயம் படிக்க வேண்டும். எங்களுடைய முன்னோர்கள் பட்ட துன்பங்களை அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்தால் மட்டுமே நாங்கள் சரியாக வாழ முடியும். 2009 ஆம் ஆண்டுக்கு முற் பாடு இந்த மண்ணில் சுதந்திரமாக சமய, கலாசார, மத, மொழி அடிப்படையில் கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆனால், தற்போது இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை வழிநடத்துகின்ற - எங்களை துச்சமாக மதித்து ஒவ்வொரு விடயங்களையும் செய்கின்ற ஒரு சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இதற்கு பிரதான காரணம் வடக்கு - கிழக்கு - மலையகத்தில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் இடையே இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகத்தான் எங்களை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இலகுவாக வழிநடத்தி தங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டுவருவதற்கு இலகுவாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வடக்கு - கிழக்கு, மலையகம் என்ற மூன்றும் இணைந்த கட்டமைப்பை அவர் சிந்தனை வடிவில் செய்து அதன் அடையாளமாக மலையகத்தில் பெரியதொரு பொங்குதமிழையும் செய்திருந்தார். அவ்வாறு வடக்கு - கிழக்கு, மலையகத்தில் பொங்குதமிழை செய்ததன் ஊடாக நாங்கள் மூன்று இடங்களிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற அடையாளத்தை அவர் அன்று பதிவிட்டிருந்தார்.

ஆனால், இன்று அந்த மூன்று இடங்களிலும் இருக்கின்ற கட்டமைப்பு இல்லாமல் வடக்கு - கிழக்கு, மலையகம் என்று தமிழ் மக்கள், மக்கள் பிரதிநிதிகள் பிரிந்து நிற்கிறார்கள். இது எங்களுடைய முன்னோர்களின் சிந்தனை செயல்பாடுகளுக்கு நாங்கள் செய்கின்ற துரோகமாகத்தான் நான் பார்க்கின்றேன். முடிந்தளவில் எல்லோரும் ஒற்றுமையாக பயணிப்போம் - என்றார். (ஐ)

ஈழநாடு



# நடைமுறை சாத்தியமில்லாத விடயங்களை கேட்காதீர்கள்!

## தமிழ், தென்னிலங்கை கடும்போக்குவாத அரசியல்வாதிகளை கேட்கிறார் பிரசன்ன!



**கொழும்பு, ஓக. 21**

**நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களை கோரி பிரச்னைகளுக்கு தீர்வுகளை காணும் முயற்சிகளையும் சந்தர்ப்பங்களையும் இல்லாதொழிக்கவேண்டாம் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் வாக்குவங்கிக்கான தென்னிலங்கை கடும்போக்குவாதிகள் ஆகிய தரப்புகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 13ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே அதுபற்றிய விடயங்களை முன்னெடுக்கும்போது எதிர்ப்புகளை வெளியிடுவது பொருத்தமல்ல. அத்துடன், அத்திருத்தச்சட்டத்தில் காணப்படுகின்ற நிர்வாக சிக்கல்களை தீர்க்கும் வகையிலான திருத்தங்கள் பாராளுமன்றத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

அவ்வாறான நிலையில் வடக்கு அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களை கோருவதில் பயனில்லை. அவ்வாறு அவர்கள் தொடர்ச்சியாக விடுக்கும் கோரிக்கையானது பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு வழி சமைக்காது. மாறாக, அவை தொடர்ச்சியாக நீடித்துச் செல்லவே வழிசமைப்பதாக இருக்கும்.

இதேபோன்று தென்னிலங்கையில் வாக்கு வங்கிகளுக்காக கடும்போக்காளர்களாக தம்மை காண்பித்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை குழப்பிவிடக்கூடாது.

வடக்கு மக்களுக்கும், தெற்கு மக்களுக்கும் தற்போது வரையில் முழுமையான இரு தரப்பு நம்பிக்கை ஏற்படுத்தப்படாமல் துருவப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலைமையையே முதலில் மாற்ற வேண்டும். அதற்காக ஜனாதிபதி முதற்கட்டமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

அதன் அடிப்படையில், இரு இன மக்களுக்கும் இடையில் புரிதலும் நம்பிக்கையும் ஏற்பட்டு நல்லிணக்கம் உருவாகின்ற தருணத்தில், மேலதிகமான விடயங்களை பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும்.

இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல், அரசியல் தரப்பில் உள்ளவர்கள் தமது நலன்களுக்காக அதி உச்சமான விடயங்களை விவாதித்துக் கொண்டிருப்பதானது சந்தர்ப்பத்தையும் காலத்தையும் வீணடிப்பதாகவே இருக்கும் - என்றார். (ஐ)

# உணவுக்கு பின் சோடா குடித்தவர் வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 21

உணவு உண்ட பின்னர் சோடா குடித்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

மானிப்பாயில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சங்கானைப் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரராசா ரசித்தன் (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடையில் இருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் சேர்த்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெண்களை மயக்கமாக்கி கொள்ளையிட்டோர் கைது!

ஹற்றன், ஓக. 21

பெண்களை மயக்கமடையச் செய்து அவர்கள் அணிந்துள்ள தங்க நகைகளை கொள்ளையிட்ட குழு ஒன்றை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில், ஹற்றனில் நடந்த கொள்ளைச் சம்பவத்தை அடுத்தே இந்தக் குழு கைது செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 12ஆம் திகதி ஹற்றன் நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் நடைபெற்ற விழாவுக்கு வந்த பெண்ணுடன் நட்பை ஏற்படுத்திய பெண் தான் வந்த முச்சக்கர வண்டியில் வீட்டுக்கு செல்லலாம் என கூறி அழைத்துச் சென்றுள்ளார். அந்த முச்சக்கர வண்டியில் மேலும் இரண்டு ஆண்களும் பயணித்துள்ளனர்.

பயணத்தின்போது, அந்தப் பெண்ணுக்கு தண்ணீர் வழங்கியுள்ளனர். அதைக் குடித்த பெண் மயக்கமடைந்துள்ளார். இதைத் தொடர்ந்து அவரிடம் இருந்த 4 இலட்சம் ரூபாய் மதிப்பான இரண்டரை பவுண் நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் இரு ஆண்களும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

# பிரச்னைகளுக்கு இந்த வாரத்தில் தீர்வு இல்லையேல் தொழில்சங்க போராட்டம்!



கொழும்பு, ஓக. 21

மருத்துவர்களின் பிரச்னைகளுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு காணப்படாவிடின் வேறு வகையான தொழில்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக மருத்துவர்களை அச்சுறுத்தவே சுகாதார அமைச்சு முயற்சித்து வருகிறது என்றும் அந்த சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பிரச்னைகளுக்கு சுகாதார அமைச்சு உடனடி தீர்வை வழங்காவிடின் எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருக்கும் என்று அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே கூறியுள்ளார்.

இந்த வாரத்தில் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், வேறு வகையான தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# 15 வீத மின்சார தேவையே நீர் மூலம் பூர்த்தியாகிறது!

கொழும்பு, ஓக. 21

தற்போது 15 வீதமான மின்சாரத் தேவை நீர் மின் நிலையங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் சராசரி நீர்மட்டம் தற்போது அதன் முழுக்கொள்ளளவில் 23 சதவீதமாக உள்ளது என சபை குறிப்பிட்டுள்ளது.

ரன்தெனிகலை அணையின் நீர்மட்டம் அதன் கொள்ளளவில் 8.1 வீதமாக குறைந்துள்ளதுடன் விக்ரோறியா அணையின் நீர்மட்டம் 27 வீதமாக உள்ளது.

சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவில் 1.9 வீதமாக குறைந்துள்ளது. நீர் மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டதால், தற்போது நிலக்கரி மற்றும் அனல் மின் நிலையங்கள் மூலம் 80 சதவீத மின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இதேவேளை, சில நிபந்தனைகளின் கீழ் குறுகிய கால அடிப்படையில் 100 மெகா வாட்ஸ் மின்சார உற்பத்தித் திறனை ஆறு மாதங்களுக்கு கொள்வனவு செய்வதற்கான அனுமதியை இலங்கை மின்சார சபை பெற்றுள்ளது. (ஐ)

# இ. போ. ச. பஸ்களில் முறைகேடு தடுப்பதற்கு புதிய வேலைத்திட்டம்

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, ஓக. 21

பயணச்சீட்டு வழங்காத இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு விசேட வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் மோசடிகளே இலங்கை போக்குவரத்து சபை நட்டமடைய முக்கிய காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த மோசடிகளை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இ.போ.ச வருமானத்தில் ஒரு பகுதியை சாரதிகளும் நடத்துநர்களும் பகிர்ந்து கொள்கின்றனர். இது அன்றாட நடவடிக்கை. இதன் மூலம் இ. போ. ச. நாளொன்றுக்கு பெற வேண்டிய ஒரு கோடி ரூபாயை சாரதிகளும் நடத்துநர்களும் பகிர்ந்து கொள்கின்றனர்.

இ.போ.ச பேருந்தில் ஏறிய பின்னர் பயணச்சீட்டு பெற்றுக் கொள்ளுமாறும், பயணச்சீட்டு கிடைக்காவிட்டால் புதிய முறைமையின் ஊடாக முறைப்பாடு செய்யுமாறும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)

# 37 ஆயிரத்தில் 29 ஆயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகின

கொழும்பு, ஓக. 21

மூன்று வருடங்களில் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்ட 37 ஆயிரத்து 179 வீடுகளில் 29 ஆயிரத்து 34 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் 8 ஆயிரத்து 145 வீடுகள் கட்டி முடிக்க வேண்டியுள்ளன என்றும் அந்த அதிகார சபை கூறுகிறது. இந்த வீட்டுத் திட்டங்கள் கடந்த 2020 முதல் 2023 வரையிலான மூன்று ஆண்டுகளில் தொடங்கப்பட்டன.

உங்களுக்கு வீடு - நாட்டிற்கு எதிர்காலம், மிஹிந்து நிவஹன, விரு சுமித்துரு செவன, சேவாபிமானி உள்ளிட்ட 15 வீடமைப்பு உதவித் திட்டங்களின் கீழ் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. ஆயிரத்து 871 கோடி ரூபாயாகும். இதுவரை ஆயிரத்து 640 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வீடமைப்புத் திட்டத்துக்கான நிதிகளுக்கு நடைமுறைப் படுத்தப்படும் விசேட திட்டங்களுக்குத் திறைசேரி நிதிகள், செவன நிதிகள், உள்ளக உற்பத்தி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் வீடமைப்பு திட்டத்துக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சிய வீடுகளை விரைவாக பூர்த்தி செய்யுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார். அதுவரை புதிய வீட்டுத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். எஞ்சிய 8,145 வீடுகளை கட்டி முடிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடந்தது கொடியேற்றம்!

**திருகோணமலை, ஓக. 21**

**கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12. 30 மணிக்கு நடைபெற்றது.**

மூல மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெற்று கொடி மரத்துக்கு விசேட கிரியைகள் நடைபெற்றன. மரபு ரீதியான முறையில் ஆலய கங்காணம் இராசையா ஞானகணேசன் என்பவரால் கொடிச்சேலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அருள்மிகு தெஜா வல்லி, மஹா வல்லி சமேதராக சித்திரவேலாயுர் சுவாமியின் கொடியேற்றம் இடம்பெற்றது.

இதன்போது அடியார்களின் அரோகரா கோஷத்துடனும் மங்கள வாத்தியம் முழங்க, சிவாச்சாரிய குருமார்களின் வேத மந்திர பாராயணத்துடன் கொடியேற்றம் நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் கொடியேற்றத்தில் பங்கேற்றனர்.






# திருமலை சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

*திருகோணமலை, ஓக. 21*

திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை திருமலை வளாக சித்த மருத்துவ பீடத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச. தேவதாசன், கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் திருமதி ஜே. ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. சிறிதர், சித்த மருத்துவ பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ. சுதர்சன் மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சித்த மருத்துவத்தின் தந்தையாக இருக்கின்ற அகத்திய முனிவரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, சர்வமத அனுஷ்டானங்களுடன் சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



# இராமகிருஷ்ண மிஷனால் தண்ணீர் பந்தல் அமைப்பு

*மட்டக்களப்பு, ஓக. 21*

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை

கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் அமைக்கப்பட்டது.

காலஞ்சென்ற திருமதி சண்முகரட்ணம் ஞாபகார்த்தமாக தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷன் கல்லடி சிறுவர் ஆச்சிரம பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையிலான குழுவினர் இத் தண்ணீர் பந்தலை முன்னெடுத்தனர். இதில், பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்றனர். (ஐ)

# கூடுதலாகக் கட்டணம் வசூலித்த மருத்துவ நிலையங்களுக்கு அபராதம்!

*அம்பாறை, ஓக. 21*

அம்பாறை மாவட்டத்திலுள்ள மருத்துவ பரிசோதனை நிலையமொன்றில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதல் கட்டணத்துக்கு இரத்த மாதிரி பரிசோதனை அறிக்கை வழங்கிய இரு மருத்துவமனை உரிமையாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மாவட்ட பொறுப்பதிகாரி எஸ். என். எம். சகலிய பண்டார தெரிவித்தார் .

இவ்வாறு பாவனையாளர்களுக்கு எதிராக செயல்படுவோர் சம்பந்தமான முறைப்பாடுகளை 1977 என்ற இலக்கத்திற்கு அல்லது 0632222355 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரெட்ரிக் கோட்டை மக்களின் பார்வைக்கு

*திருகோணமலை, ஓக. 21*

பாதுகாக்கப்பட்ட திருகோணமலை பிரெட்ரிக் கோட்டையை பார்வையிடுவதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு நேற்றுமுன்தினம் முதல் வாய்ப்பு வழங்கப்பட்டுள் ளது.

இதன்படி சுற்றுலா பயணிகளுக்காக திறந்து வைக்கப்பட்டதுடன் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் சுற்றுலா பயணச்சீட்டு அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய கலாசார நிதியத்தின் திருகோணமலை திட்டத்தின் ஊடாக திருகோணமலை பிரட்ரிக் கோட்டையின் பாரம்பரிய முகாமைத்துவ செயல்பாடுகள் கடந்த சில வருடங்களாக பொது மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இரு லொறிகள் மோதி விபத்து; யாழிலிருந்து சென்றவர் காயம்!

*திருகோணமலை, ஓக. 21*

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை வந்த லொறி நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருகோணமலை -ஹொரவ பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதியான யாழ்ப்பாணத்தை சேர்ந்த எஸ். திலீபன் (38) என்பவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறி வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியே விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.




விபத்துக் குறித்து மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சீனிப் பாணியை தேன் எனக்கூறி விற்றவர் கைது!

*மட்டக்களப்பு, ஓக. 21*

சீனிப்பாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கைதானவரிடம் இருந்து ஆறுக்கும் மேற்பட்ட சீனிப்பாணிகளைக் கொண்ட போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட சீனிப்பாணி அந்த இடத்திலேயே சுகாதாரப் பகுதியினரால் அழிக்கப்பட்டன.

புதிய காத்தான்குடி அல்அக்சா பள்ளிவாசலுக்கு வருகின்ற உள்ளூர் சுற்றுலா பயணிகளை ஏமாற்றி குறித்த நபர் சீனிபாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி ஒரு போத்தல் 2000 ரூபாய் வரை விற்பனை செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)


அழிக்கப்பட்ட சீனிப்பாணி

# கோவிட் - 19 வைரஸின் புதிய பிறழ்வு கண்டறிவு

## பரிசோதனைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு நாடுகளை கோரியது உலக சுகாதார அமைப்பு

**நியூயோர்க், ஓக. 21**

**கோவிட் வைரஸின் ஒமைக்ரோன் குடும்பத்தைச் சேர்ந்தது எனக் கூறப்படுகின்ற புதிய - தீவிரமான பிறழ்வுகளுடன் கூடிய - வைரஸ் ஒன்றை ஐ. நா. மற்றும் அமெரிக்க நிபுணர்கள் கண்காணித்து வருகின்றனர். உலக சுகாதார நிறுவனம் அதனைக் "கண்காணிப்பின் கீழான திரிபு" என்று உடனடியாக அறிவித்திருக்கிறது.**

பி. ஏ. .2.86 என்ற அறிவியல் எண் கொண்ட இந்தப் புதிய பிறழ்வுக்குச் சமூக ஊடகங்களில் "பைரோலா" (Pirola) எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஒமைக்ரோன் திரிபின் முந்திய பல உப திரிபுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகப் பல மடங்கு தீவிரமான பிறழ்வுகளை கொண்டிருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வைரஸின் "ஸ்பைக் புரதம்" எனப்படும் தொற்று வீரியத்தில் இது முப்பது அமினோ அமில மாறுபாடுகளை காட்டுவதாக மருத்துவ அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை அமெரிக்கா, டென்மார்க், இஸ்ரேல், இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளில் அதன் தொற்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. இஸ்ரேலில் முதலாவது தொற்று அறியப்பட்டது. அதன் பிறகு டென்மார்க்கில் இரண்டு பேருக்குத் தொற்றியமை தெரிய வந்தது.

உலகெங்கும் அது எவ்வளவு தூரம் பரவியுள்ளது, மனித நோய் எதிர்ப்புச் சக்தியை மீறிப் பரவுமா என்பவற்றை அறிவதற்காக அறிவியலாளர்கள் போராடி வருவதால் அது விடயத்தில் உலக




நாடுகள் விழிப்படைந்துள்ளன.

கோவிட் வைரஸின் திரிபுகளின் மரபணுக்களைப் பரிசோதிக்கின்ற முயற்சிகளை பல நாடுகளும் கைவிட்டிருப்பதால் புதிய திரிபுகளின் தொற்று நிலைவரத்தைச் சரிவரக் கணிக்கமுடியாத நிலைமை காணப்படுகிறது. எனவே, மரபணுத் தரவுகளைச் சேகரிக்கும் ஆய்வுகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு உலக சுகாதார நிறுவனம் நாடுகளை கேட்டுள்ளது.

இதேவேளை, எரிஸ் எனப் பெயரிடப்பட்ட மற்றோர் உப திரிபு பிரான்ஸ் உட்பட அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் தொற்றுக்களை அதிகரிக்க செய்துள்ளது. கோடை காலம் முடிந்து குளிர்காலம் தொடங்கும் சமயத்தில் தொற்றுகள் இன்னும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான புதிய திரிபுகள் பொதுவாக உயிராபத்தை ஏற்படுத்தமாட்டாது என்று கருதப்பட்டாலும் தீவிர நோயாளிகள், நோயெதிர்ப்பு சக்திக் குறைபாடு உள்ளவர்கள் மற்றும் வயோதிப பருவத்தினர் போன்றவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

(ஐ)




# ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் நிலவின் தரையில் மோதியது!

*மொஸ்கோ, ஓக. 21*

ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் கட்டுப்பாடற்ற சுற்றுப்பாதையில் சுழன்று சந்திரனில் விழுந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்க முயன்றது. ஆனால், அதன் முன்னர் தரையிறங்கும் சுற்றுப்பாதையில் நகர்ந்தபோது சிக்கல்களை எதிர்கொண்ட பிறகு சந்திரனில் மோதியதாகக் கூறப்படுகின்றது.

50 ஆண்டுகளில் ரஷ்யாவின் முதல் நிலவுப் பயணம் இதுவாகும்.

உறைந்த நீர் மற்றும் விலை மதிப்பற்ற வளங்களை இருக்கக் கூடும் என்று விஞ்ஞானிகள் நினைக்கும் நிலவின் தென் பகுதியை ஆராய்வதற்காக விண்கலம் இன்று திங்கட்கிழமை தரையிறக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ரஷ்யாவின் அரசு விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ், லூனா -25 உடனான தொடர்பை அது சிரமங்களுக்குள்ளான சிறிது நேரத்திலேயே இழந்ததாகக் கூறியது.

இதனிடையே, இந்தியா அனுப்பிய சந்திரயான் - 3 விண்கலம் நாளை மறுதினம் சந்திரனில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)

# 7 சிசுக்களை கொன்ற தாதி குற்றவாளியாக அறிவிப்பு!

## தண்டனை இன்று விதிக்கப்படும்

*லண்டன், ஓக. 21*

இங்கிலாந்தில் மருத்துவமனை ஒன்றில் 7 சிசுக்களை கொன்ற தாதி ஒருவர் கைது செய்யப்பட்டு, குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு இங்கிலாந்தின் செஸ்டர் பகுதியில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் கடந்த 2015 ஜூன் மாதத்தில் 3 சிசுக்கள் மர்மமான முறையில் அடுத்தடுத்து இறந்தன. இது அங்கு பணியாற்றிய இந்திய வம்சாவளி மருத்துவர் டாக்டர் ரவி ஜெயராமுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

அங்கு பணியாற்றும் லூசி லெட்பி என்ற தாதிமீது அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரை கண்காணிக்கத் தொடங்கினார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒரு சிசுவின் ஒட்சிசன் அளவு குறைய தொடங்கிய போது, அங்கு பணியில் இருந்த தாதியான லூசி எதுவும் செய்யாமல் இருந்துள்ளார்.

இதனால், சிசுக்கள் இறப்புக்கு செவிலியர் லூசிதான் காரணம் என சந்தேகம் அடைந்த டாக்டர் ரவி ஜெயராம், மருத்துவமனையில் பல கூட்டங்களை நடத்திய தாதியான லூசியின் செயல்பாடு குறித்து நிர்வாகத்திடம் முறைப்பாடு அளித்தார்.

ஆனால், இந்த குற்றச்சாட்டை மருத்துவமனை நிர்வாகம் முதலில் கண்டுகொள்வில்லை. இதன் பின்பு அங்கு சிசுக்கள்




இறப்பது தொடர்ந்தது. ஓராண்டு காலத்தில் 7 குழந்தைகள் இறந்ததால், இந்த விவகாரம் பொலிஸ் விசாரணைக்கு சென்றது.

லூசி லெட்பியிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகின. மருத்துவமனையில் சிசுக்களை வேண்டும் என்றே கொலை செய்ததை லூசி ஒப்புக் கொண்டார். ஊசி மூலம் காற்று, இன்சுலின் ஆகியவற்றை செலுத்துதல், பால் அல்லது திரவங்களை அளவுக்கு அதிகமாக கொடுத்தல், குழந்தையின் வாய் வழியாக காற்றை செலுத்துதல் போன்ற முறைகளில் குழந்தைகளை கொலை செய்தமையை ஒப்புக் கொண்டார். பொலிஸார் நடத்திய சோதனையில் லூசியின் டயரி ஒன்றில் சில குறிப்புகளும் இருந்துள்ளன.

"நான் வேண்டும் என்றே அவர்களை கொன்றேன். ஏனென்றால், அவர்களை பராமரிக்கும் அளவுக்கு நான் நல்லவள் அல்ல. நான் கொடியவள், அதனால் தான் இதுபோல் செய்தேன்". "இன்று உனது பிறந்தநாள், ஆனால் நீ இங்கு இல்லை. அதற்காக மிகவும் வருந்துகிறேன்" என்ற வாசகங்கள் தாதி லூசி லெட்பியின் சைக்கோ மன நிலையை காட்டுவதாக இருந்தது.

இதையடுத்து லூசி கடந்த 2018 ஜூலை மாதம் கைது செய்யப்பட்டார். கடந்த 2020ஆம் ஆண்டில் அவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

மான்செஸ்டர் கிரவுன் நீதிமன்றத்தில் தாதி லூசி மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் மீது 6 கொலை முயற்சி குற்றச்சாட்டுகளும் உள்ளன. அவருக்கு இன்று திங்கட்கிழமை தண்டனை அறிவிக்கப்படவுள்ளது.

(ஐ)



# உக்ரைனில் தாக்குதல்: 7 பேர் பலி; 141 பேர் காயம்!

*கீவ், ஓக. 21*

உக்ரைனில் ரஷ்யா நடத்திய வான் வழித் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். மேலும் 141 பேர் படுகாயம் அடைந்தனர்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் ஒன்றரை வருடத்தை கடந்துள்ளது.

உக்ரைன் நகரங்கள் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து ஏவுகணை, ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் உக்ரைனின் வடக்கு பகுதியின் செர்னிஹிவ் நகரில் ரஷ்ய படைகள் நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் நடத்தின. இதில், ஒரு திரையரங்கு, பல்கலைக்கழகம் உள்ளிட்டவை குறிவைக்கப்பட்டன.

இதில் 6 வயது சிறுமி உள்பட 7 பேர் பலியாகினர். சுமார் 141 படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

(ஐ)

# இந்தியாவின் பாதுகாப்பு கரிசனை இலங்கையினதுமே!

## இந்திய தூதுவர் மிலிந்த

**கொழும்பு, ஓக. 21**

**இந்து சமுத்திரம் குறித்த இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகள் இலங்கையின் பாதுகாப்பு கரிசனைகளே என்று கூறிய இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட, இலங்கை இது குறித்து தீவிர கவனம் செலுத்துகின்றது என்றும் கூறினார்.**

புதுடில்லியின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்படி கூறினார். இந்திய - இலங்கை உறவுகளின் பரிணாமம் வாய்ப்புகளும் சவால்களும் என்பது குறித்தும் அவர் விவரித்தார்.

பொருளாதாரம், வலுசக்தி, கலாசாரம், பாதுகாப்பு மற்றும் இந்து சமுத்திரத்தில் பிராந்திய இயக்கவியல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பின் முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக தெரிவித்த அவர், பல ஆண்டுகளாக இரு நாடுகளினதும் உறவுகள் எவ்வாறுபரிவர்த்தனை கட்டத்திலிருந்து விசேடமானவையாக மாறியுள்ளன என்பதை சுட்டிக்காட்டினார்.

சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட முயற்சிகளில் படிப்படியான முன்னேற்றத்தைக் காண்பதன் மூலம் எவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை விசேடமானவையாக மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.



இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்புகள் அதிகளவுக்கு தொடர்புகள் மற்றும் இரு நாடுகளினதும் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார ஒருங்கிணைப்பு திட்டத்தின் அடிப்படையிலான முதலீடுகள் ஆகியவற்றை அடிப்படையானதாக கொண்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் சமீபத்தைய இந்திய பயணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள மிலிந்த மொறகொட இந்திய - இலங்கை கூட்டாண்மை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து இணைப்பு மையப்படுத்தப்பட்ட செயல்படுத்தல்கள் தற்போதுள்ள உறவுகளை மேலும் முன்னோக்கி செலுத்துவதில் உந்துசக்தியாக விளங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள மிலிந்த மொறகொட பல ஆண்டுகளாக இலங்கை படையினரின் திறன்களை மேம்படுத்துவதற்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தனது நெருங்கிய அயல் மற்றும் இந்து சமுத்திரம் குறித்த இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகள் இலங்கையின் பாதுகாப்பு கரிசனைகளே எனவும் தெரிவித்த மிலிந்த மொறகொட இதன் காரணமாக இலங்கை இது குறித்து தீவிர கவனம் செலுத்துகின்றது குறிப்பாக இந்துசமுத்திரத்தில் இடம்பெறும் விடயங்கள் குறித்து- என்றார். (ஐ)

# கொடுத்த கடனை பெற சென்றவர் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 21

கடனாகக் கொடுத்த பணத்தை மீளப் பெறச் சென்றவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பு - மஹரகம - நாவின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், தலகலை பிரதேசத்தை சேர்ந்த 58 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபர் நாவின்ன பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு கடனாக பணம் கொடுத்துள்ளார். அதைப் மீளப் பெறுவதற்காக நேற்று முன்தினம் நண்பருடன் முச்சக்கர வண்டியில் கடன் வாங்கியவரின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

அந்த வீட்டின் கேற்றை திறக்க முயன்றபோது கடன் வாங்கிய சந்தேகநபர் இருவரையும் கத்தியால் தாக்கியுள்ளார். அங்கிருந்து தப்பி, இருவரும் காயமடைந்த நிலையில் முச்சக்கர வண்டியில் இருவரும் மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்.

எனினும், அங்கு ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் ஹோமகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தக் கொலைக்கு காரணமென சந்தேகிக்கப்படும் நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தெகிவளை துப்பாக்கி சூடு இளைஞர் ஒருவர் காயம்!

கொழும்பு, ஓக. 21

தெகிவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெகிவளை ஒபன் பிளேஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கி சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது 30 வயதான நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அவர் தனது வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் நின்றிருந்தபோதே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்.

காயமடைந்த நபர் களுபோவில மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரியவருகின்றது. (ஐ)

# பெண்ணுக்கு எமனானது கைபேசி!

கொழும்பு, ஓக. 21

கைபேசியில் கதைத்தவாறு ரயில் பாதையில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவர் ரயிலால் மோதப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலைக்கும் ஹற்றனுக்கும் இடையிலான பாலத்துக்கு அருகே பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே அந்தப் பெண்ணை மோதியது.

உயிரிழந்தவர் ஹட்டன், குடாகம பிரதேசத்தை சேர்ந்தவர் என்று அறிய வருகின்றது.

# வெளிநாட்டு விடுமுறை கோரிக்கை; பரிசீலிக்காது விடுவதற்கு தீர்மானம்!

கொழும்பு, ஓக. 21

நீதித்துறை அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் வெளிநாட்டு விடுமுறை கோரிக்கைகளை பரிசீலிப்பதில்லை என்று நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதித்துறை சேவையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் சேவை தேவைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 5 வருட சம்பளமில்லாத விடுமுறையை வழங்குவதற்கு அரசாங்கம் விசேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின்படி, நீதித்துறை அதிகாரிகளின் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையை கோரும் விண்ணப்பங்களை இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பரிசீலிக்க முடியாது என்று நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழு அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (ஐ)

# தனியார் மருந்தகத்தில் வாங்கிய மருந்தை விழுங்கியவர் மரணம்!

கொழும்பு, ஓக. 21

இங்கிரிய பிரதேசத்தில் உள்ள தனியார் மருந்தகத்தில் வாங்கிய மருந்தை உட்கொண்ட ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பகுதியில் அதே இடத்தைச் சேர்ந்த 65 வயது நபரே உயிரிழந்தார்.

கொலஸ்ட்ரோலுக்கு மருத்துவர் பரிந்துரைத்த மருந்தை அவர் தனியார் மருந்தகத்தில் வாங்கியுள்ளார்.

கடந்த ஒரு வாரமாக அந்த மருந்தை முன்பிருந்து உட்கொண்டுவந்தநிலையில் அவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இது தவறான மருந்தால் ஏற்பட்ட மரணமா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# போதைக்கு அடிமையான கான்ஸ்டபிள் பணிநீக்கம்!

கொழும்பு, ஓக. 21

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான குற்றச்சாட்டில் கொழும்பு போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஆரம்பகட்ட விசாரணையின் பின்னர் கொழும்பு போக்குவரத்து பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியால் இந்த கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் சேதாவத்தை பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை செய்யும் இடத்தை சுற்றிவளைத்த போது அந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அங்கிருந்து உள்ளார்.

கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பு சட்ட மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டார். அவர் ஆபத்தான போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று சோதனையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# சுற்றுலா வீசாவில் செல்வோரை கண்காணிக்கும் பணி ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 21

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சுற்றுலா வீசா மூலம் வெளியேறும் இலங்கையர்களை கண்காணிக்கும் நடவடிக்கை நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

சுற்றுலா வீசாவில் வெளியேறுபவர்கள் பற்றிய விவரங்களை காட்சிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆள் கடத்தலை தடுக்கவும், மோசடிச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் தனிநபர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைத் தடுக்கவுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கென தனியான பிரிவு ஒன்றும் விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளன. (ஐ)

# வெங்காயத்துக்கான வரி இந்தியாவில் உயர்கின்றது

கொழும்பு, ஓக. 21

வெங்காயத்துக்கு ஏற்றுமதி வரியாக 40 வீதத்தை நிர்ணயிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

முக்கிய சந்தைகளில் வெங்காயத்தின் சராசரி மொத்த விற்பனை விலை ஜூலை முதல் ஓகஸ்ட் வரை சுமார் 20வீதம் வரை உயர்ந்துள்ளதால் டிசெம்பர் 31ஆம் திகதி வரை இந்த வரியை விதிக்க இந்தியா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்றுமதி வரி அதிகரிப்பால் இலங்கை மற்றும் பங்களாதேஷ், நேபாளம், மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளை பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடமராட்சியில்...

சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது. இதில் சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்தனர்.

விபத்துக் குறித்து நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## லயன்...

வீடொன்றையோ வீடமைக் க் காணி துண்டு ஒன்றையோ வழங்குமாறு பல வரு டங்களாக பல தோட்ட முகாமையாளர்களிடம் இக்குடும்பத்தினர் கேட்டு வந்துள்ளனர்.

அவ்வகையில் தற்போதுள்ள முகாமையாளருக்கு முன்பிருந்தவர், ஓர் இடத்தைக் காட்டி இங்கு வீடமைத்துக் கொள்ளுங்கள் என அனுமதி வழங்கியுள்ளார். இதையடுத்து, அவர்கள், வாழை உள்ளிட்ட சில பயிர் செய்கையை அவ்விடத்தில் செய்துள்ளனர்.

இந்நிலையில், ஒரு வாரத்துக்கு முன்னர் அங்கு தற்காலிக வீடு ஒன்றையும் அமைத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று அங்கு சிலருடன் சென்ற உதவிமுகாமையாளர், அந்தக் குடியிருப்பை உடைத்து பொருள்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தினார். உதவி முகாமையாளர் உட்பட இருவர் இணைந்து வீட்டை உடைத்துப் பொருள்களைச் சேதம் செய்யும் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டுள்ளது. மேலும் அந்த உதவி முகாமையாளரின் நடவ டிக்கை குறித்து உரிய அதிகாரிகளுக்குப் பாதிக்கப்பட்ட மக்கள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு பல தரப்புகள் மத்தியிலிருந்தும் எதிர்ப்புகள் எழுந்ததைத் தொடர்ந்து உதவி முகாமையாளர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்று தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## நாகபட்டினம்...

கூட்டத்தில் பங்கேற்ற தமிழக பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ. வ. வேலு பேசியதாவது:

தமிழ்நாடு கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் நுழைவாயிலுடன் கூடிய தனித்துவமான கடற்கரையைக் கொண்டுள்ளது. அதன் கடல்சார் மற்றும் துறைமுகத் துறையை வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் சாகர்மாலா திட்டத்தின் கீழ், மானியமாக தமிழக கடல் சார் சபைக்கு 120 கோடி (இந்திய) ரூபாய் நிதியுதவி அளித்த மத்திய அமைச்சர், மத்திய அரசுக்கு நன்றி.

இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும் வகையில் இலங்கைக்கு தொடங்கவுள்ள முதன்மையான படகு சேவைக்கு வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. இது நாடுகளுக்கிடையே உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளின் போக்குவரத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வர்த்தகத்தையும் மேம்படுத்தும்.

இந்தப் படகு சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது. ராமேசுவரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவையை புதுப்பிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1980ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்த இந்தியா - இலங்கை இடையிலான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டம் இருக்கும்.

கடலோர கடல் வளங்களை பாதுகாப்பது நமது பொறுப்பும், கடமையும் ஆகும். தமிழகத்தின் மத்தியில் உள்ள தொழிற்சாலை பகுதிகளுக்கு தேவையான சரக்குகளை கையாளக் கூடிய வகையில், கடலூர் பகுதியில் பெரும் திறன் கொண்ட பசுமைவளத் துறைமுகத்தை உருவாக்கவும், தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் மெற்றிக் தொன் சரக்குகளை இத்துறைமுகம்கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார்.

## இருந்த...

கலந்துரையாடி சிவன் ஆலயம் அமைப்பது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பில் குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலய நிர்வாகம் கருத்து வெளியிடுகையில்,

"குருந்தூர்மலையில் பழமை வாய்ந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயம் இருந்தது. அதன் எச்சங்களில் தொடர்ந்து வழிபாடு நடத்தப்பட்டு வந்தது. அவை இப்பொழுது அழிக்கப்பட்டு விட்டன. ஆதிசிவனார் ஆலயமிருந்த அதே இடத்தில் மீளவும் சிவன் ஆலயம் அமைப்பதெனில் நாம் அதற்கு உடன்படுவோம். மாறாக, சட்டவிரோத விகாரைக்கு அங்கீகாரமளிக்கும் மறைமுக நிகழ்ச்சி நிரலுடன், வேறு யோசனைகளை கொண்டு வந்தால், சிவசேனையுடன் கலந்துரையாடலே நடத்த மாட்டோம்" என்றனர். (ஐ)

## எங்கள்...

வெளியீட்டு விழா புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மலையகம் என்பதை நாம் பிரித்து பார்க்க முடியாது காரணம் என்னவென்றால் எங்களுடைய இனத்தின் போராட்டத்திலே பல இயக்கங்கள் உருவாகினாலும் விடுதலை வேட்கையோடு எங்களுடைய மலையக இளைஞர்கள் அதிலே இணைந்தார்கள்.

**மலையக உறவுகளின் தியாகம்**

தங்களுடைய இருப்பிடம் வேறாக இருந்தாலும் உணர்வென்ற அடிப்படையிலே எமது இனம் விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த இளைஞர்கள் ஆயுத போராட்டத்திலே இணைந்து கொண்டதை நாம் இங்கே நினைவுகூர வேண்டும்.

அது மட்டுமல்ல வன்னியிலே எல்லை கிராமங்களை தமிழர்கள் தக்கவைத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்றால் இந்த மலையக தேசத்திலிருந்து இடம்பெயர்ந்து எங்களுடைய வன்னி மாவட்டத்திலே வடக்கிலே குடியிருக்கும் மலையக உறவுகளின் தியாகம்தான் அவற்றைப் பாதுகாத்திருக்கின்றது.

விடுதலை வேட்கை என்பது எப்படி உருவானது என பாருங்கள், இளைஞர்கள் ஆயுத போராட்டத்திற்கு சென்றார்கள். ஆனால் மலையகத்திலிருந்து வாழ வேண்டும் என வந்த உறவுகள் எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் உணர்வோடு செயல்படுகின்றார்கள். இடங்கள் தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பத்திலே உணர்த்தியிருக்கின்றார்கள்.

மலையகம் என்பது மலை சார்ந்த இடம் அந்த மக்கள் ஒரு தேசிய இனம் அந்த தேசிய இனத்துக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை தட்டிக்கேட்கின்ற பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கின்றது. ஏனென்றால் அவர்களுடைய செயல்பாடு, அனைத்து விடயங்கள் அனைத்தும் எம்மோடு ஒன்றிணைந்து போகின்ற சூழல் மலையகத்தில் குளிர் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் எமது இனம் ஒன்று என காட்டுகின்ற அந்த நிலையிலையே அந்த மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுக்கின்ற கடமையும் பொறுப்பும் எங்களிடம் இருக்கின்றது.

இந்த மலையக மக்கள் எங்கள் நாட்டிலே வாழ அவர்களுக்கு எல்லா உரித்தும் இருக்கின்றது. அவர்களிடம் இன்று நிலம் இல்லை ஆனால், வேறு யாருடையதோ நிலத்தை காப்பாற்ற போராடுகின்றார்கள். அவர்களுக்கு நல்ல சம்பளம் இல்லை அதனை பெற்றுக்கொடுக்க அரசியல் தலைமைகள் முனைந்தாலும்கூட இந்த அரசாங்கம் இடம்கொடுப்பதில்லை.

மலையகத்தில் வாழும் எம் உறவுகளை தூக்கிவிடுவதும் அவர்களுடைய பிரச்னையை தீர்ப்பதற்கு ஒன்றாக இணைந்து அவர்களை வெல்ல வைப்பதும் எமது கடமை - என்றார். (ஐ)

# எமது மக்கள் மீதான அடாவடிகளை இனியும் பார்த்திருக்க மாட்டோம்!

## இராதாகிருஷ்ணன் எம். பி.

நுவரெலியா, ஓக. 21

மாத்தளை ரத்வத்தை - கீழ்ப்பிரிவு தோட்டத்தில் தோட்ட துரை ஒருவர் அடாவடித்தனமாக நடந்துகொண்ட விடயம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இனியும் எமது மக்களை அடிமைகளாக நினைத்து அடாவடி செய்வதை ஒரு நாளும் மக்கள் பிரதிநிதியான நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, குறித்த தோட்ட உதவி முகாமையாளரை உடன் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

"இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென கடந்த பாராளுமன்ற விவாதத்தில் விவாதித்த போதும் கூட இவ்வாறான சம்பவங்கள் தோட்டங்களில் இடம்பெறுகின்றன. இதுபோல வெளிவாரத பல அநியாயங்கள் பல தோட்டங்களில் எம் மக்களுக்கு இடம்பெறுகின்றன.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தோட்டத்துரை, பாதிக்கப்பட்ட குடும்பத்திடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறியுள்ளார்.

எமக்கு தேவை மன்னிப்பு கிடையாது , உடனடியாக சம்பந்தப்பட்ட துரை பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் ரமேஸ் பத்திரணவிடம் தொலைபேசி மூலம் வலியுறுத்தினேன். அதை செய்ய காலம் தாமதிக்கும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# குளவி கொட்டியதில் 16 வயது சிறுவன் பலி!

நுவரெலியா, ஓக. 21

விறகு சேகரிப்பதற்காக காட்டுக்கு சென்ற சிறுவர்களை குளவி கொட்டியதில் 16 வயது சிறுவன் உயிரிழந்தார். ஆறு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் நுவரெலியா - பம்பரகலை தோட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவபெருமான் தில்ஷான் (16) என்பவரே உயிரிழந்தார். ஏனையோர் சிகிச்சைக்காக நுவரெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் நிலையில், மூவர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

குறித்த சிறுவன் குளவி கொட்டும் போது தப்பித்து ஓடுவதற்கு முயன்று தடுக்கி விழுந்தார். அப்போது, கடுமையான குளவி கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அடித்தால்...

'மலையகம்-200' நூல் வெளியீட்டு விழா நேற்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

மாத்தளை - ரத்வத்தை தோட்டத்தில் தமிழ் தொழிலாளர்களின் தற்காலிக வீடுகள் உதவி முகாமையாளரால் அடித்து நொருக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அதுதான் உங்களுக்கு புரிகின்ற பாஷை என்றால் அதை பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறேன். நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காக திருப்பி அடிக்கும் உரிமையின் சட்ட வரம்பு பற்றி கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும் அவரின் அரசு எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களை கண்டும் காணாமல் இருக்கிறது.

ஆகவே, பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துக்கொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும் - என்றார். (ஐ)

## விசுவமடு...

மோதி விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். (ஐ)

## சஜித்...

அழகபெருமவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என்ற உடன்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கூட்டணி ஏற்படுத்தப்படுகிறது என்று கூறப்படுகின்றது.

புதிய கூட்டணிக்காக இரு தரப்பிலும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குருந்தூரில்...

வடக்கு மாணத்தில் சிங்கள மக்கள் வாழ்வதை விரும்பாத தரப்பினர் விகாரையின் கட்டுமான பணிகளை எதிர்த்தனர். இவ்வாறான இனவாதத்தை தூண்டும் தரப்பினரே பொங்கல் வழிபாடுகளை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும் இதனை நாம் தவறான தீர்மானமாகவே கருதுகிறோம்.

நீதிமன்ற உத்தரவை மதிக்கும் வகையில் நாம் இதற்கு இடையூறு விளைவிக்காதிருந்தோம். எனினும், இங்கு நடைபெறும் இறுதி பூசையாக அல்லது நிகழ்வாக இது இருக்க வேண்டும்.

குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்துத் தீர்ப்புக்களையும் சவாலுக்கு உட்படுத்தி நாம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளோம். இந்த பிரச்னையை மேன்முறையீட்டு நீதிமன்றில் தீர்த்துக் கொள்ள நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

இந்த தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. இது இலங்கையின் சொத்து. இதன் உண்மையான உரிமையாளர்கள் பௌத்தர்களே. இவற்றை பாதுகாக்கவும் இதன் பயனை பெற்றுக்கொள்ளவும் அனைவருக்கும் உரிமையுண்டு.

எனினும், இது பௌத்தர்களுக்கானது. அந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஐ. எம். எவ்வின் 2ஆம் கட்ட நிதியை பெறுவதில் சிக்கல் எதுவுமில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஓக. 21

**சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியை பெற்றுக்கொள்வதில் சிக்கல் இல்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிபந்தனைகளில் 80 சதவீதமானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியை பெற்றுக்கொள்வதில் சிக்கல்நிலை ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம்கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்கான மீளாய்வு பேச்சுகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சர்வதேச நாணயம் விதித்த சவால்மிக்க நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். சர்வதேச நாணய நிதியமும் இது தொடர்பில் அவதானித்தவாறே உள்ளது.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிபந்தனைகளில் நூற்றுக்கு 80 சதவீதமான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள நிபந்தனைகளும் நிறைவேற்றப்படும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே, நிதியத்தின் இரண்டாம்கட்ட நிதியை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் இருக்காது.

இதேவேளை, 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களுக்கான இறக்குமதிக்கு தடை விதித்தே எமது நாட்டில் டொலர் இருப்பை ஓரளவேனும் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. மறைபெறுமதிக்கு சென்ற எமது டொலர் இருப்பு 300 கோடி டொலராக தற்போது அதிகரித்துள்ளது.

எந்த நாடுகளும் தொடர்ச்சியாக இறக்குமதியை தடை செய்து கொண்டு இருக்க முடியாது. இது உலக சம்பிரதாயமாகும். இறக்குமதிக்கான தடைகளை முறையாக தளர்த்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது மறை பெறுமதிக்கு சென்றுவிட்டதாக நாம் தொடர்ச்சியாகக் கூறுகின்றோம். பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கப்படும் போதும் சகல விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும். பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கப்படும்போது தீர்வை வரிகுறித்தும் அவதானம் செலுத்தப்படுகின்றது. (ஐ)

# யால பூங்காவுக்கு ஜனாதிபதி பயணம்!






கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யால தேசிய பூங்காவுக்கு நேற்று முன்தினம் சுற்றுப் பயணம் செய்து அங்கு நிலைமைகளை அவதானித்தார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் இதில் பங்கேற்றிருந்தார்.

அதன்போது யால பூங்காவின் உள்நுழைவு பற்றுச்சீட்டுகளை ஒன்லைன் மூலம் கொள்வனவு செய்யக் கூடிய வழிமுறையை அமுல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை பரிசீலிக்குமாறு அவர் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பூங்காவில் வறண்டு கிடக்கும் குழிகளுக்கு நீர் நிரப்பும் நிகழ்ச்சியிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். (ஐ)

# பொதுஜன பெரமுன கட்சியை ஒருபோதும் வீழ்த்த முடியாது!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, ஓக. 21

குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன முன்னோக்கி பயணிப்பதாகவும் மொட்டுக் கட்சி ஒருபோதும் வீழ்ச்சியை சந்திக்காது என அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ தரப்பினராலேயே கொழும்பு நகர் என்பது அபிவிருத்திக் கண்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பு மாவட்டம் என்பது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் மட்டுமே அபிவிருத்திக் கண்டது. எதிர்காலத்திலும் எமது அரசாங்கத்தால் பெரும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போதைய சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்த பயணம் என்பது அவசியமானது.

மொட்டுக் கட்சியை அழித்துவிடலாம் என்று சிலர் நினைத்தனர். மொட்டு கட்சியில் உறுப்பினர்கள் இல்லை. அமைச்சர்கள் இல்லை. உறுப்பினர்கள் கட்சித் தாவிவிட்டனர் என்றவாறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அமைச்சர்கள் ஒருவரும் கட்சி தாவவில்லை. இதனை விளக்கிக்கூறுவதற்கான ஒரு சந்தர்ப்பம் எமக்கு ஏற்படும். அந்த சந்தர்ப்பத்தில் அதனை நாம் கூறிக் கொள்கின்றோம். அரசியல்வாதிகள் என்போர் ஒரு போதும் கைவிட்டுச் செல்பவர்கள் அல்லர்.

மொட்டு கட்சியின் சாம்ராச்சியம் முடிந்துவிட்டது. மொட்டுக் கட்சிக்கு இனி இருப்பிடம் இல்லை என்றே சகலரும் நினைத்தனர். எமது கட்சியின் பயணம் களுத்துறையிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது கட்சியில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு மீண்டும் பயணிக்கின்றோம். சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பது பெரும் கட்சியாகும் - என்றார். (ஐ)

# நண்பர்களின் துரோகத்தாலேயே டலஸ் ஜனாதிபதியாகவில்லை!

## டிலான் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 21

அரசியல் நண்பர்கள் துரோகமிழைத்தாலேயே டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக முடியாமல் போனது என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்

அரசியல் நண்பர்கள் விலை போனதன் காரணமாகவே டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக முடியாமல் போனதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# 120 மருத்துவ நிபுணர்கள் கறுப்பு பட்டியலில் சேர்ப்பு

கொழும்பு, ஓக. 21

நாட்டை விட்டு வெளியேறிய 120 விசேட மருத்துவ நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளுக்கு சென்று பணிக்குத் திரும்பாத மருத்துவ நிபுணர்களே இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2022 ஜனவரி 9ஆம் திகதி முதல் கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 363 மருத்துவர்கள் வெளிநாட்டு பயிற்சிக்காக சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில், 120 மருத்துவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை என குறிப்பிடப்படுகின்றது. கறுப்புப் பட்டியலில் உள்ள மருத்துவர்கள் நாடு திரும்ப முடியும் என்ற போதிலும் அவர்கள் சேவையில் ஈடுபடுவதானால் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சீன கப்பலுக்கு அனுமதியளிப்பதா இன்னமும் முடிவு எடுக்கவில்லை!

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

சீன கப்பலுக்கு அனுமதி வழங்குமாறு சீனத் தூதரகம் விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்பதா, இல்லையா என்பது குறித்து அரசாங்கம் இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் இராஜதந்திர பிரிவின் இயக்குநர் பிரியங்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய - சீனா இடையே பதற்றம் மீண்டும் தலைதூக்கியுள்ளதுடன் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் நடுநிலை தன்மையை சோதிப்பதாகவும் சீனாவின் சின் யான் 6 ஆராய்ச்சி கப்பலுக்கு அனுமதியளிப்பதா என்ற விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தலைவலியை ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளது.

இன்னும் உறுதிசெய்யப்படாத திகதியில் சீன கப்பலுக்கு அனுமதி வழங்குமாறு சீன தூதரகம் விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து இலங்கை அரசாங்கம் இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் இராஜதந்திர பிரிவின் இயக்குநர் பிரியங்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோள் தொடர்பில் வழமையான இராஜதந்திர நடைமுறைகளை அமைச்சு பின்பற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன கப்பல் ஒக்ரோபர் 25ஆம் திகதி இலங்கை வரவுள்ளது நவம்பர் 11ஆம் திகதி கப்பல் இலங்கையில் தரித்துநிற்கும் என இலங்கை கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், இது அனுமதி வழங்கப்படுகின்றதா என்பதை பொறுத்தவிடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் அதிகரித்துள்ள பதற்றங்கள் காரணமாக முன்னர் வழமையான துறைமுக பயணங்களாகக் காணப்பட்டவை தற்போது சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அரசாங்கம் நெருக்கடியான நிலையில் உள்ளது என முன்னாள் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீன கப்பலின் வேவு பார்க்கும் திறன் குறித்த இந்தியாவின் கரிசனைகளை நிராகரிக்க முடியாது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

4000 தொன் ஆழகடல் ஆராய்ச்சிக்கப்பல் புவி இயற்பியல் மேற்கொள்ளக்கூடியது மேலும் கடலியல் கடல் சூழலியல் புவியியல் ஆகியவற்றை படிப்பதுடன் நிலம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான மாதிரிகளை சேகரிக்கக்கூடியது.

வெளிநாட்டு கப்பல்களுடன் அறிவியல் கடல்சார்வியல் தொடர்பான ஆராய்ச்சிகளின் மையப்புள்ளியாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் காணப்படுகின்றது. இது சீனாவின் கப்பல்களுக்கும் பொருந்தும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உலகக் கிண்ணத்தை ஸ்பெயின் கைப்பற்றியது!




பிரிஸ்பர்ன், ஓக. 21

பிபா மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை ஸ்பெயின் கைப்பற்றியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் முதல் முறையாக மகளிர் உலகக் கிண்ணம் வென்றது.

அவுஸ்திரேலியாவில் நடந்த இந்த ஆட்டத்தில் 29ஆவது நிமிடத்தில் கப்டன் ஓல்கா கார்மோனா கோல் அடித்தார். இங்கிலாந்து இரண்டாவது பாதியில் தீவிர முயற்சி மேற்கொண்ட போதும், ஆட்டத்தை சமநிலைப்படுத்த முடியவில்லை.

மகளிர் உலகக் கிண்ணத்தை வென்ற ஐந்தாவது அணி என்ற பெருமையை ஸ்பெயின் பெற்றது.

2023 பிபா மகளிர் உலகக் கிண்ணம் இறுதிப் போட்டியைத் தொடர்ந்து நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ஸ்பெயினின் சல்மா பாரலுலோவுக்கு பிபா சிறந்த இளம் வீராங்கனை விருது வழங்கப்பட்டது.

இங்கிலாந்தின் மேரி ஏர்ப்ஸ் சிறந்த கோல் காப்பாளருக்கான தங்க கையுறை விருதைப் பெற்றார். ஸ்பெயினின் ஐதானா பொன்மட்டிக்கு தங்கப் பந்து விருது வழங்கப்பட்டது. (ஐ)




# பிபா மகளிர் உலகக் கிண்ணம் வெண்கல பதக்கம் சுவீடன் வசம்

பிரிஸ்பர்ன், ஓக. 21

பிபா மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இதில் பிரிஸ்பன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 3ஆவது இடத்துக்கான போட்டியில் அவுஸ்திரேலியா - சுவீடன் நாடுகள் மோதின.

இதில், சுவீடன் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கல பதக்கத்துடன் தொடரை நிறைவு செய்தது. போட்டி 30ஆவது நிமிடத்தில் பொக்ஸ் பகுதிக்குள் வைத்து சுவீடன் வீராங்கனை பிளாக்ஸ்டீனியஸை அவுஸ்திரேலியாவின் கிளேர் ஹன்ட் தவறான ஆட்டம் ஆடினார்.

இதனால் சுவீடன் அணிக்கு பெனால்டி கிக் வழங்கப்பட்டது. இதை ஃப்ரிடோலினா ரோல்ஃபோ கோலாக மாற்ற சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 62ஆவது நிமிடத்தில் பிளாக்ஸ்டீனியஸிடம் இருந்து கிராஸை பெற்ற கொசோவரே அஸ்லானி பொக்ஸ் பகுதிக்கு வெளியே இருந்து உதைத்த பந்து கோல் வலையை துளைத்தது. இதனால் சுவீடன் அணியின் முன்னிலை 2-0 என அதிகரித்தது.

அவுஸ்திரேலிய வீராங்கனைகள் பலமுறை இலக்கை நோக்கி பந்தைகொண்டு சென்ற போதிலும் அவற்றை கோல்களாக மாற்ற முடியாமல் போனது. முடிவில் சுவீடன் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை வசப்படுத்தியது. அந்த அணி உலகக் கிண்ண வரலாற்றில் வெண்கல பதக்கம் வெல்வது இது 4ஆவது முறையாகும். (ஐ)

# காலி ரைட்டன்ஸை வீழ்த்தியது கண்டி



கொழும்பு, ஓக. 21

காலி ரைட்டன்ஸ் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி கொண்ட பி லவ் கண்டி அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

எல். பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டிக்கு முந்தைய போட்டியில் காலி - கண்டி அணிகள் மோதின.

அணித் தலைவர் வனிந்து ஹசரங்க சகலதுறைகளிலும் பிரகாசித்து அணியின் வெற்றியில் பிரதான பங்காற்றினார்.

தினேஷ் சந்திமால், அஞ்சலோ மெத்யூஸ், வனிந்துவின் மூத்த சகோதரர் சதுரங்க டி சில்வா, மொஹமத் ஹஸ்நய்ன் ஆகியோரும் அணியின் வெற்றிக்கு தங்களாலான அதிகப்பட்ச பங்களிப்புகளை வழங்கியிருந்தனர்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

மொஹமத் ஹரிஸ் (7), தனுக்க தாபரே (5), சஹான் ஆராச்சிகே (0) ஆகிய மூவரும் முதல் 5 ஓவர்களுக்குள் ஆட்டம் இழந்தது அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. ஆனால், தினேஷ் சந்திமால், அணித் தலைவர் வனிந்து ஹசரங்க ஆகிய இருவரும் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பெடுத்தாடி 4ஆவது விக்கெட்டில் 72 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலையில் இட்டனர்.

தசைப் பிடிப்புக்கு மத்தியில் நொண்டியவாறு ஒற்றை ஓட்டங்களை பெற்று வந்த வனிந்து ஹசரங்க, பின்னர் அதிரடியாக ஆடி, 30 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்களைக் குவித்து ஆட்டம் இழந்தார்.

மொத்த எண்ணிக்கை 105 ஓட்டங்களாக இருந்தபோது தினேஷ் சந்திமால் 38 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதனைத் தொடர்ந்து அஞ்சலோ மத்தியூஸூம் அசிப் அலியும் 6ஆவது விக்கெட்டில் 19 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு பலமான நிலைக்கு நகர்த்தினர்.

அசிப் அலி 10 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 24 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர். சதுரங்க டி சில்வா 6 பந்துகளில் 15 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் லஹிரு குமார 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சொனால் தினுஷ 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

158 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி ரைட்டன்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

லிட்டன் தாஸ், லசித் குரூஸ்புள்ளே ஆகிய இருவரும் 27 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பகிர்ந்து ஓரளவு சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

லிட்டன் தாஸ் 25 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த பின்னர் சொஹான் டி லிவேரா (1), லசித் குரூஸ்புள்ளே (17) ஆகிய இருவரும் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் களம் விட்டகன்றனர்.

சகீப் அல் ஹசன் (17), இளம் வீரர் சொனால் தினுஷ ஆகிய இருவரும் அணிக்கு பலம் சேர்க்க முயசித்தனர். ஆனால், 4ஆவது விக்கெட்டில் 28 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் ஷக்கிப் அல் ஹசன் ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து அணித் தலைவர் தசூன் ஷானக (4), நஜிபுல்லா ஸத்ரான் (1), சீக்குகே ப்ரசன்ன (1) ஆகியோர் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

இதேவேளை, துடுப்பாட்டத்தில் ஓரளவு திறமையை வெளிப்படுத்திய சொனால் தினுஷ 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்க காலி ரைட்டன்ஸின் வெற்றி வெகுதூரம் சென்றுவிட்டது.

பந்துவீச்சில் மொஹமத் ஹஸ்நய்ன், சதுரங்க டி சில்வா வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)




# மும்பையின் பயிற்றுநராகிறார் இலங்கையின் லசித் மலிங்க?

மும்பை, ஓக. 21

இலங்கை அணியின் முன்னாள் வீரர் லசித் மலிங்க அடுத்த ஆண்டுநடைபெறும் ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சு பயிற்றுநராக இணையவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது மும்பை அணியின் பந்துவீச்சு பயிற்றுநராக முன்னாள் நியூசிலாந்து வீரர் ஷேன் பொண்ட் செயல்பட்டு வருகிறார். கடந்த 9 ஐ. பி. எல். தொடர்களில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சு பயிற்றுநராக அவர் பணியாற்றி வருகிறார். தற்போது அடுத்த ஐபிஎல் சீசனில் அவருக்குப் பதிலாக மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் வீரரான லாசித் மலிங்கா பந்துவீச்சு பயிற்சியாளராக செயல்படுவார் என்ற தகவல் வெளியாகியுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

எனினும், மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக மலிங்க நியமிக்கப்படுவது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியாகவில்லை.

மலிங்க, மும்பை இந்தியன்ஸ் அணிக்காக 139 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் மொத்தமாக 195 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

முனைவர் த.வி.வெங்கடேஸ்வரன்

# சந்திரயான் 3:

## தலையெழுத்தே இந்த '15 நிமிடங்களில்" தான் உள்ளது:

# விக்ரம் லேண்டர் எப்படி தரையிறங்கும்?



ஆகஸ்ட் 23ஆம் தேதி, மாலை 5:32. அப்போது தான் இஸ்ரோ விஞ்ஞானிகளை பதைபதைக்க வைக்கும் 15 நிமிடங்கள் தொடங்கவுள்ளன.

அந்தப் பதினைந்து நிமிடங்களில்தான் நிலாவுக்கு மேலே 30 கி.மீ உயரத்தில் இருக்கக்கூடிய சந்திரயான்-3 விண்கலத்தை நிலாவில் தரையிறக்குவார்கள்.

கடந்த முறை சந்திரயான் 2 திட்டத்தில் இந்த இடத்தில்தான் தோல்வியடைந்தது. அப்போது நடந்த தவறுகளை பகுப்பாய்வு செய்து, இந்த முறை அதிலிருந்து மேம்படுத்தப்பட்ட சந்திரயான் விண்கலத்தை அமைத்துள்ளார்கள்.

இந்த 15 நிமிடங்களில் சந்திரயான் அது எட்டு கட்டங்களாக தரையிறங்கும் செயல்முறையை மேற்கொள்கிறது. அந்த எட்டு கட்டங்கள் என்னென்ன, கடந்த முறை நடந்த தவறு இப்போது நடக்காமல் இருக்க என்ன மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பன குறித்து இனி விரிவாகக் காண்போம்.

### தரையிறங்கும் நிகழ்வின் முதல் கட்டம்: வைரத்தை வைரத்தால் அறுக்கும் யுக்தி

விண்வெளியில் நிலாவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் சந்திரயான் விண்கலம் முதலில் நிலாவைச் சுற்றி வரும். பிறகு நீள்வட்டப் பாதையில் கோழி முட்டையைப் போன்ற வடிவில் சுற்றி வரும்.

அந்த நேரத்தில், நிலவுக்கு நெருக்கமாக இருக்கையில் 30 கி.மீ தொலைவிலும் தூரத்தில் இருக்கும்போது 100 கி.மீ தொலைவிலும் இருக்கும்.

அப்படிச் சுற்றி வரும் நேரத்தில், ஆகஸ்ட் 23ஆம் தேதி 30 கி.மீ. என்ற நெருக்கமான தொலைவில் இருக்கும் சூழலில் தான் நிலாவின் தென் துருவத்தில் மென்மையாகத் தரையிறங்கும் செயல்முறையை அது மேற்கொள்ள இருக்கிறது.

இந்த நேரத்தில் விண்கலம் தரையிறங்குவதற்குப் பயன்படுத்தும் அதன் நான்கு கால்களும் கீழ்நோக்கி இருக்காமல், பக்கவாட்டில் நோக்கியிருக்கும்.

### அதை எப்படி கீழ்நோக்கித் திருப்பி, தரையிறக்குவார்கள்?

அதற்குப் பின்னால் இருப்பதும் ராக்கெட் தொழில்நுட்பம்தான். வைரத்தை வைரத்தால் அறுப்பது போல, ராக்கெட் உதவியுடன் விண்வெளிக்கு ஏவப்பட்ட சந்திரயான் விண்கலத்தை, அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலாவிலும் தரையிறக்கப் போகிறார்கள்.

இதை ஓர் எளிமையான சான்றோடு கூற முடியும். தோட்டத்தில் நீர் பாய்ச்சும்போது குழாயில் இருந்து தண்ணீர் படுவேகமாக வரும். அப்போது, அதற்கு எதிர்புறத்தில் குழாயைப் பிடித்திருப்பவர் கைகளில் ஒரு தள்ளுவிசை உணரப்படும். அதுதான் ராக்கெட் தத்துவம்.

ஒருபுறத்தில் ராக்கெட்டின் எரிபொருள் எரியும்போது மறுபுறத்தில் தள்ளுவிசை கிடைக்கும். சந்திரயான் விண்கலத்தில் பக்கவாட்டில் தெரியும் கால்களில் சிறு ராக்கெட்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றை இயக்கினால் அதற்குப் பின்புறத்தில், அதாவது விண்கலத்தின் மேல் பகுதியில் ஒரு தள்ளுவிசை கிடைக்கும்.

அப்போது முன்னோக்கிச் செல்லும் விண்கலத்தின் வேகம் குறையும். அப்படி வேகம் குறைந்தால் அது மென்மையாகத் தரையிறங்கும்.

முப்பது கி.மீ தொலைவில் நிலவைச் சுற்றி வரும்போது சந்திரயானின் வேகம் மணிக்கு 6000 கி.மீ. இந்தத் தள்ளுவிசை காரணமாக வேகம் படிப்படியாகக் குறைந்து நிலாவிலிருந்து 7.4 கி.மீ தூரத்திற்கு வரும்போது அதன் வேகம் மணிக்கு வெறும் 1200 கி.மீ. என்ற அளவுக்கு குறையும்.

இந்த மொத்த நிகழ்வும் நடந்து முடிய 10 நிமிடங்கள் ஆகும். ஆக, தரையிறங்குவதற்கான அந்த 15 நிமிடங்களில் 10 நிமிடங்கள் முடிந்துவிட்டது. அடுத்த ஐந்து நிமிடங்களில் சந்திரயான் ஏழு கட்டங்களை வெற்றிகரமாகத் தாண்டியாக வேண்டும்.

### இரண்டாவது கட்டம்: நிலாவுக்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் வடிவமைத்த கூகுள் மேப்

இரண்டாவது கட்டத்தில் 7.4 கி.மீ உயரத்தில் இருந்த விண்கலத்தை படிப்படியாகக் குறைத்து 6.8 கி.மீ உயரத்திற்குக் கொண்டு வருவார்கள்.


இந்தக் கட்டத்தில் இரண்டு முக்கியமான விஷயங்கள் நடக்கின்றன. அதில் முதலாவதாக பக்கவாட்டில்



பார்த்தவாறு இருக்கும் விண்கலத்தின் கால்களை தரையிறங்க வசதியாக கீழ்நோக்கித் திருப்ப வேண்டும். பக்கவாட்டில் இருக்கும் கால்களை சுமார் 50 டிகிரி அளவுக்குத் திருப்புவார்கள்.

இரண்டாவதாக, முடிவு செய்யப்பட்ட இடத்தில் தரையிறங்குவதற்கான பாதையில் சரியாகச் செல்கிறதா அல்லது பாதையைச் சிறிதளவு மாற்றி, சரிசெய்ய வேண்டுமா என்ற முடிவை இந்தச் சூழலில்தான் எடுப்பார்கள்.

நாம் கார் ஓட்டும்போது வழியைத் தெரிந்துகொள்ள





கூகுள் மேப்பை பயன்படுத்துவது போலத்தான் இதுவும். விண்கலத்தில் இருக்கும் செயற்கை நுண்ணறிவு கருவி அதற்கான பணிகளைச் செய்யும். அதை எப்படிச் செய்யும்?

மொபைல்களில் முகத்தை அடையாளம் கண்டு அன்லாக் செய்துகொள்வதற்காகப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் போலவே, விண்கலத்தின் செயற்கை நுண்ணறிவு கருவியில் ஒரு தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ளது. அந்தத் தொழில்நுட்பத்தில் ஏற்கெனவே தரையிறங்கும் பகுதியைப் படம்பிடித்து பதிவேற்றியுள்ளார்கள்.

இந்த இரண்டாவது கட்டத்தில் விண்கலத்தின் செயற்கை நுண்ணறிவு கருவி அதன் பாதையைப் படம்பிடித்துக்கொண்டே செல்லும். அது எடுக்கும் படங்களை, அதில் பதிவேற்றி வைத்துள்ள படங்களோடு ஒப்பிட்டு, சரியான பாதையைக் கண்டறிந்து செல்லும்.

படங்களை ஒப்பிட்டு விண்கலத்தின் வழித்தடப் பாதையை முடிவு செய்து அந்த செயற்கை நுண்ணறிவு கணினி விண்கலத்தை இயக்கும்.

### மூன்றாவது கட்டம்: விண்கலத்தின் 'ராக்கெட் பிரேக்'

தற்போது நிலாவின் மேற்பரப்பில் இருந்து 800 மீட்டர் உயரத்திற்கு விண்கலம் இருக்கும் வகையில் அதைக் கீழே இறக்குவதுதான் மூன்றாவது கட்டம்.

பக்கவாட்டில் 50 டிகிரிக்கு திருப்பப்பட்ட விண்கலத்தின் கால்களை நேராக கீழ்நோக்கி இருக்கும் வகையில் திருப்புவதுதான் இந்தக் கட்டத்தில் செய்யப்படும் முதல் விஷயம்.

சைக்கிளில் பிரேக் பிடித்தால் வேகம் குறைவதைப் போல், ராக்கெட்டின் இஞ்சினை முன்புறமாக இயக்கினால் விண்கலத்தின் வேகம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும்.

மணிக்கு 1200 கி.மீ வேகத்தில் சென்றுகொண்டிருந்த விண்கலம், 800 மீட்டர் உயரத்திற்கு வரும்போது, அதன் முன்னோக்கிச் செல்லும் வேகம் பூஜ்ஜியமாகிவிடும்.

### நான்காவது கட்டம்: அடி மேல் அடி வைத்து நகரும் விக்ரம் லேண்டர்


இந்தக் கட்டத்தில் விண்கலத்தின் ராக்கெட் விசையைக் குறைத்துவிடுவார்கள். விண்கலம் அடி மேல் அடி வைத்து 800 மீட்டர் உயரத்தில் இருந்து 150 மீட்டர் உயரத்திற்கு வந்து சேரும்.

அப்படி வந்து சேர்ந்ததும், 22 நொடிகளுக்கு அந்தரத்தில் அப்படியே மிதக்கும். இந்தச் சூழ்நிலையில்தான் விண்கலத்தில் இருக்கும் 'இடர் உணர் ஆபத்து தவிர் கேமராக்கள்' வேலை செய்யத் தொடங்கும்.

தரையிறங்கும் விண்கலத்தின் நான்கு கால்களில் ஒன்று பாறை மேல் பட்டாலோ, குழிக்குள் சென்றாலோ விண்கலம் சாய்ந்துவிடும். சரிவில் தரையிறங்கினால் கவிழ்ந்து தலைகுப்புற விழுந்துவிடக்கூடும். இத்தகைய இடர்கள் இல்லாத இடத்தைக் கண்டறிய வேண்டும்.

அத்தகைய இடத்தைத் தேர்வு செய்யக்கூடிய செயற்கை

(மறுபக்கம் பார்க்க)



நுண்ணறிவு கருவி சந்திரயான் 3இன் கணினியில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில்தான் நிலாவின் எந்தப் பகுதியில் தரையிறங்குவது என்பதைத் துல்லியமாக அந்த விண்கலம் முடிவு செய்யும்.

நிலா தனது ஈர்ப்புவிசையால் விண்கலத்தைப் பிடித்து இழுக்கும். அதற்கு சரிசமமாக விண்கலத்தின் கால்களில் உள்ள ராக்கெட்டுகள் மேல்நோக்கிய தள்ளுவிசையைக் கொடுக்கும் வகையில் இயங்கும். இதன்மூலம் விண்கலம் கீழேயும் விழாமல் மேலேயும் செல்லாமல் அந்தரத்தில் இருக்கும்.


அப்போது கீழே இருக்கும் பகுதிகளில், பெரிய குழிகள் மட்டுமின்றி சின்னச் சின்ன குழிகள், சிறு சிறு கற்கள் உட்பட அனைத்தையும் அதனால் மிகத் துல்லியமாக ஆராய முடியும். இப்படியே பக்கவாட்டில் நகர்ந்தபடி ஆராய்ந்து துல்லியமாக எந்த இடத்தில் தரையிறங்க வேண்டும் என்பதை முடிவு செய்யும்.

**ஐந்தாவது கட்டம்: நிலாவின் மேற்பரப்பை நெருங்கும் விண்கலம்**

நிலாவின் மேற்பரப்பில் இருந்து 150 மீட்டரில் இருந்த விக்ரம் தரையிறங்கி கலன், 60 மீட்டர் உயரத்திற்கு கீழே இறங்குவதுதான் ஐந்தாவது கட்டம்.


இப்போது எந்த இடத்தில் தரையிறங்க வேண்டுமோ அந்த இடத்தில் விண்கலம் இருக்கிறது. இந்த நிலையில், கீழ்நோக்கி இறங்கக்கூடிய ராக்கெட்டின் விசையைக் கொஞ்சம் குறைத்தால் என்ன நடக்கும்?

நிலாவினுடைய ஈர்ப்புவிசையின் கை ஓங்கி, மெல்ல மெல்ல காற்றில் மிதந்து விழுகும் இறகைப் போல விண்கலம் கீழ்நோக்கிச் செல்லும்.




இந்த முறை விண்கலத்தில் லேசர் டாப்லர் வெலாசிமீட்டர் என்ற புதிய கருவியை இஸ்ரோ இணைத்துள்ளது. இந்தக் கருவி நிலாவின் தரையை நோக்கி ஒரு லேசர் கற்றையை அனுப்பும்.

அந்த லேசர் கற்றை திரும்பி மேல்நோக்கி வரும். அதை உணர்ந்து, விண்கலம் எவ்வளவு வேகத்தில் கீழ்நோக்கிச் செல்கிறது என்பதை கணத்திற்கு கணம் கணக்கிடும். அதைப் பொருத்து, கூடுதல் வேகம் இல்லாமல் தேவைப்படும் வேகத்தில் தரையிறங்கும் வேலையை அந்தக் கணினி செய்யும். அந்த அளவுக்கு ராக்கெட்டை நுணுக்கமாக இயக்கும் வேலையை செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினி செய்யும்.





**ஆறாவது கட்டம்: விண்கலத்தை கீழே விழாமல் தடுக்கும் எளிய நுட்பம்**

அதன்பிறகு அறுபது மீட்டர் உயரத்தில் 10 மீட்டர் உயரத்திற்கு விண்கலத்தைக் கீழே இறக்குவதுதான் ஆறாவது கட்டம்.

இந்தச் சூழலில் பயன்படுவதற்காக விண்கலத்தில் மற்றுமொரு சிறப்பம்சத்தை விஞ்ஞானிகள் வைத்துள்ளார்கள். விண்கலத்தின் கீழ்பகுதியில் தரையைப் பார்த்தவாறு ஒரு கேமரா பொருத்தப்பட்டிருக்கும். அது தொடர்ச்சியாக புகைப்படங்களை எடுத்துக்கொண்டே இருக்கும். அது எதற்காக?

இதை ஒரு எளிய சான்றுடன் விளக்கலாம். நமக்கு எதிரே ஒரு பேருந்து வந்து கொண்டிருக்கிறது என வைத்துக்கொள்வோம். அது தொலைவில் இருக்கும் போது அதன் உருவம் மிகவும் சிறியதாகத் தெரிகிறது. ஆனால், பேருந்து நம்மை நெருங்க நெருங்க, அந்த உருவம் பெரிதாகிக் கொண்டே வரும் அல்லவா!


பேருந்தின் உருவம் எவ்வளவு வேகமாக நம் கண்களுக்குப் பெரிதாகப் புலப்படுகிறது என்பதை வைத்து பேருந்தின் வேகத்தைக் கணக்கிட முடியும்.

அதேபோல, விண்கலம் கீழ்நோக்கிச் செல்லும்போது அது எடுக்கும் புகைப்படங்களில் நிலவின் தரைப்பரப்பு எவ்வளவு வேகமாகப் பெரிதாகிறது என்பதை அடிப்படையாக வைத்து எவ்வளவு வேகத்தில் விண்கலம் கீழ் நோக்கி வருகிறது என்பதைக் கணக்கிடலாம். ஒன்றுக்கு இரண்டான பாதுகாப்பு என்பதே இதன் நோக்கம்.

அதிக வேகத்தில் கீழே இறங்கினால் மென்மையாகத் தரையிறங்காமல் விழுவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதைத் தவிர்க்கவே இத்தகைய புதுமையான நுட்பங்கள்.

**ஏழாவது கட்டம்: விண்கலத்தின் தலையெழுத்தை தீர்மானிக்கும் திக்... திக்... நிமிடங்கள்**

இப்போது நிலவின் தரைப்பரப்பில் இருந்து வெறும் 10 மீட்டர் உயரத்தில் விண்கலம் இருக்கிறது. இந்த நேரத்தில் ராக்கெட் அனைத்தையும் ஆஃப் செய்துவிட்டு விண்கலத்தை நிலத்தில் கல் விழுவதைப் போல் தொப்பென விழ வைப்பார்கள். இதுதான் ஏழாவது கட்டம்.



தரையிறங்கும் கடைசி நொடி வரை ஏன் ராக்கெட்டுகளை இயக்கவில்லை?

ஏனெனில், நிலாவின் தரைப்பரப்பு முழுக்க மிகவும் மெல்லிய மண் துகள்கள் நிறைந்திருக்கும். தரை வரைக்கும் ராக்கெட்டை இயக்கிக்கொண்டே இறங்கினால், அந்த மண் துகள்கள் புழுதியாக மேலெழும்பும்.

அப்படி எழும்பும் தூசுகள் விண்கலத்தின் மேற்பரப்பில் உள்ள சூரியத் தகடுகளில் படிந்து சூரிய ஒளியைத் தடுத்து மின்சாரமே உற்பத்தி செய்ய முடியாத அபாயம் ஏற்பட்டுவிடலாம். அதைத் தவிர்ப்பதற்காகவே இந்த யுக்தி.

அப்படி விழும்போது நொடிக்கு 2 மீட்டர் என்ற வேகத்தில் விழ வைக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. ஆனால் தவறுதலாக நொடிக்கு 3 மீட்டர் என்ற வேகத்தில் விழுந்தாலும்கூட அதைத் தாங்கக்கூடிய அளவுக்கு தரையிறங்கி கலனின் கால்களை அமைத்துள்ளார்கள்.



முதல் கட்டம் முடிந்த பிறகு, இரண்டாவது கட்டத்தில் 800 மீட்டர் உயரத்தில் இருந்த விண்கலம் ஏழாவது கட்டத்தில் வெறும் பத்து மீட்டர் உயரத்திற்கு வந்து சேர வெறும் 4:30 நிமிடங்களே ஆகும். இந்த நேரத்தைத்தான் விண்கலத்தின் “திக்... திக்... நிமிடங்களாக” விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இந்த விண்கலத்திற்கு வாழ்வா சாவா என்று அதன் தலையெழுத்தை தீர்மானிக்கப் போகும் நிமிடங்கள் அவை. இந்த நேரத்தில் விண்கலம் எப்படி இயங்க வேண்டும், பக்கவாட்டில் நகர வேண்டுமா, கீழே எவ்வளவு வேகத்தில் இறங்க வேண்டும் என அனைத்தையும் விண்கலத்தின் உள்ளே இருக்கக்கூடிய செயற்கை நுண்ணறிவு கணினிதான் தீர்மானிக்கும். அந்த நேரத்தில் விண்கலத்தின் தலையெழுத்து அந்த செயற்கை நுண்ணறிவு கையில் தான்.

**எட்டாவது கட்டம்: கண்கொள்ளா காட்சியை காணக் காத்திருக்கும் உலகம்**

ஒருவழியாக தரையிறங்கி கலன் கீழே இறங்கிவிட்டது. ஆனாலும் விழுந்த வேகத்தில் தூசுகள் மேலே எழும்பியிருக்கும். அவை அடங்கும்வரை ஏதும் செய்யாமல் விண்கலம் அப்படியே இருக்கும்.

அனைத்தும் அடங்கிய பிறகு, கங்காரு தனது வயிற்றுக்குள் குட்டியை வைத்திருப்பது போலவே, வயிற்றுக்குள் தரையிறங்கி கலன் வைத்திருக்கும் ஊர்திக்கலனை வெளியே கொண்டு வரும்.

ஊர்திக்கலன் வெளியே வந்ததும் அதன் தாய்க்கலனான தரையிறங்கி கலனை புகைப்படம் எடுக்கும். தாய்க்கலன் ஊர்திக்கலனை புகைப்படம் எடுக்கும். அந்த புகைப்படங்களின் கண்கொள்ளாக் காட்சியைக் காண இந்தியா மட்டுமின்றி உலகமே காத்திருக்கிறது.

# வெளியக சுயநிர்ணயத்தை கோருவதற்கு தயங்கமாட்டோம்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் திட்டமிட்ட கெடுபிடிகள் நீடிப்பதற்கு இடமளிக்க முடியாது என்று குறிப்பிட்ட இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், அந்நிலைமைகள் தொடர்ந்தால் அகிம்சை வழியில் மக்கள் தமது உரிமைகளுக்காக அணி திரண்டு போராடும் நிலைமைகள் ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தேரர்கள் பௌத்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு தொடர்ச்சியாக முனைப்புக்களை செய்து பதற்றமான சூழல்களை உருவாக்கி வருகின்றமை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுகளின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, அவர்கள் தமது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு உள்ளக சுயநிர்ணய உரிமையை கோருவதற்கு உரித்துடையவர்கள்.

அதன் அடிப்படையில், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று நிரந்தரமானதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை மையப்படுத்தியும் இந்திய - இலங்கை ஒப்பந்தம், 13ஆவது திருத்தச்சட்டம் ஆகியவற்றை அமுலாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைவாக முன்மொழிவை அனுப்பி வைத்துள்ளேன்.

### அளிக்கப்பட்ட வாக்குறுதிகள்

அதேநேரம், இனப்பிரச்னைக்கான தீர்வு விடயம் சம்பந்தமான ஜனாதிபதியுடனான உரையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்திய படையினர் மற்றும் தேரர்கள் உள்ளிட்டவர்களின் கெடுபிடியான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தோம்.

அத்தோடு, மேற்படி தரப்பினரின் செயற்பாடுகளால் சரித்திர ரீதியாக தாம் வாழ்ந்த பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் பெருவாரியாக வெளியேறியுள்ளதோடு, தற்போதும் வெளியேறி வருகின்றனர். இந்த நிலைமையானது வடக்கு, கிழக்கில் செறிவாக வாழும் தமிழ் மக்களின் பரம்பலை மாற்றி பெரும்பான்மை மக்களை பெருவாரியாக அதிகரிக்கச் செய்வதற்கான திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும்.

இந்த நிகழ்ச்சி நிரல் தொடர முடியாது என்பதையும் நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். அப்போது, குறித்த விடயங்கள் உடன் நிறுத்தப்படும் என்ற உறுதிமொழி அரசாங்கத்தால் எமக்கு வழங்கப்பட்டது. எனினும், அந்த நிலைமைகள் தற்போதும் தொடருகின்றன.



குறித்த செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. அவ்விதமான நிலைமைகள் நீடிக்குமாயின், அஹிம்சை வழியில் தமிழ் மக்கள் அணி திரண்டு போராடும் நிலைமையே ஏற்படும். அந்த நிலைமையை தவிர்க்க முடியாது.

### இந்தியா பார்வையாளராக இராது

தமிழ் மக்களை பொறுத்தவரையில், அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரித்துடையவர்கள். இந்த விடயம் ஐக்கிய நாடுகள் சாசனங்களின் ஊடாகவும், 1983ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் விடயங்களில் கரிசனைகளைக் கொண்டு, 1987ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, இந்திய - இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 36 ஆண்டுகளாகியுள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தாதிருக்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக அதனை மீறுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் பார்வையாளராக இருக்கப்போவதில்லை. இந்தியா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கோரிக்கைகளை நாம் அழுத்தமாக முன்வைப்பதற்கு தயாராகவே உள்ளோம்.

### தயங்கப்போவதில்லை!

மேலும், தமிழ் மக்களின் குடிப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளும் ஆக்கிரமிப்புக்களும் பதற்றமான சூழல்களும் தொடரும் நிலையில், அவரின் உரித்துக்கள் மறுதலிக்கப்பட்டால், ஐ.நா. சாசனங்கள் மற்றும் கட்டமைப்புகளின் உதவியுடன் நாம் வெளியக சுயநிர்ணய உரித்தினை கோருவதற்கான நிலைமையொன்று ஏற்படும்.

அவ்விதமான நிலைமைக்குள் எம்மை தள்ளிச் செல்லாமல், அரசாங்கம், தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் கௌரவமாகவும், சாந்தி, சமாதானமாகவும், தங்களுடைய விடயங்களை தாங்களே பார்த்துக்கொள்ளும் வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

இந்த விடயத்தில், எமது மக்கள் விரும்பாத எந்தவொரு விடயத்தையும் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதில் எவ்விதமான விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை. தமிழ் மக்கள் 1956ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற ஆணைக்கு அமைவாக, சமஷ்டி அடிப்படையில் நியாயமான நிரந்தர தீர்வு அமையவேண்டும் - என்றார். (ஐ)

